1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்திய வேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 24-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம்ஆண்டு ஆனி மாதம் 21-ந்திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## தேவ வள்ளன்மை

வள்ளன்மைஎன்பது வள்ளல் தன்மை என்பதின் சுருங்கிய பதமாகும். தாமடைந்துள்ள பொருளின்பயனை இரப்போர்க்கு இல்லையென்னுதுவரம்பின்றி வழங்கும் கொடையாளிகளையே அக்காலத்தும் இக்காலத்தும் வள்ளல்கள்என்ற சிறப்புப்பெயரால் நம்தமிழ்நாட்டுமக்கள் அழைக்கின்றனர். வள்ளன்மை என்பது கொடைத்தன்மை. அதாவது கொடுக்குங்குணம். ஒருவன் மிகுந்த தனம்படைத்தவனுயிருந்தும் கொடுக்குங்குணம் படைத்தவனுயிரான். இத்தகையோனை உலோபியென உலகம் பெரிதும் இகழ்ந்துரைக்கும். ஒருவன் கொடுக்குங்குணம் படைத்திருந்தும் வழங்கும் பொருள்படையாத வறிஞனுய் இருப்பான். "எறிகிறவன் கையில் கல்லைக்கொடுக்கவில்லையே"என்று இத்தகையோரைக் குறித்து இரங்கிக்கூறுவதுண்டு.

தற்காலத்தைவிட முற்காலத்தில் நம்தமிழ்நாட்டில் வள்ளல்கள் மலிந்திருந்ததாகச் சொல்லப்படுகிறது. இல்லையென்று தம்வாயிலில் இரக்கவருவோரின் அகக்குறையை அவரது முகத்தோற்றத்தாலேயேஅறிந்து, அவர்கள்வாய்திறந்து கேட்காமுன்னரே பொன்னும்,மணியும், பட்டும், பீதாம்பரமும் வழங்கி அவர்களது வறுமைப்பிணியைக் களைந்த வள்ளல்கள் பலர் நம்தமிழ்நாட்டில் வாழ்ந்தார்களெனச் சரித்திரவாயிலாக அறிகின்றோம். அத்தகைய வள்ளல்கள் மலிந்து பெருமை பெற்ற நம்தாய்நாட்டில் இப்போது ஆயிரத்துக்கொரு வள்ளலைக் காண்பதும் அரிதாகிவிட்டது. இதற்குக்காரணம் காலத்தின் இயற்கைதானே அல்லது மனப்பான்மையில் ஏற்பட்ட மாறுபாடோ அறியோம்.

அக்காலத்து வள்ளல்களின் வள்ளன்மையும், அவர்கள் வறியோர்க்கு வழங்கியபான்மையும் கேட்கக்கேட்க ருசிகரமானது. வள்ளல்தன்மையுடன் கொடை வழங்கிய வள்ளல்களிடம் மட்டுமன்றி, அவர்களிடமிருந்து இரந்துபெற்ற வறிஞர்களிடம் கூட எத்தகைய பெருந்தன்மையோடுகூடிய வள்ளன்மை விளங்கியதென்பதைஅறிய வெகுபிரமிப்பாய்இருக்கின்றது.

வரம்பின்றிவழங்கும் வள்ளல் ஒருவனைத் தேடிஅடைந்து பல வகையான வரிசைகளையும் பெற்றுவருகின்றுன் ஒரு பாணன். தேர்களையும், குதிரைகளையும், யானைத்தொகுதிகளையும் வரிசைப்பொருள்களாகப்பெற்று யானைமீது இவர்ந்து வருகின்றஅப்பாணனை எதிர்கொண்டு கடக்கின்றுன் வறிஞனை பிறிதோர் பாணன். இத்தனைசிறப்புகளோடும் வருகின்ற பாணனை வறிஞனை பாணன் கண்டு மன்னனென எண்ணி மயங்குகின்றுன்.

"வாகைசூடிவரும் வெற்றி வேந்தே! உன் ஊரையும், பேரையும் உரைப்பாயாக"என வினவுகின்றுன் வறிஞன். பரிசுபெற்றுவரும் பாணன் பதில் மொழியாக: "ஐயா! இவைகள் திறைப்பொருள்கள் அல்ல; மகத நாட்டு மன்னனிடமிருந்து வரிசையாகப்பெற்றபரிசில்பொருள்கள். யானும் உன்னைப்போல் வறியபாணனேயன்றி மன்னனல்ல. நீயும் அம்மகதநாட்டு அண்ணலையடைந்தால் யான்

பண்டிதை—சிஸ்றர் எமறென்ஸியா

பெற்றபேறு பெற்று மீளலாம். அவன் இருக்கும்இடத்தைக்கண்டடைய அடையாளங்கள் இவையிவைஎனக்கூறி வழிவிட்டான்" என வரலாறுகூறுகின்றது.

வறுமைநோயால் வாடிவதங்கிப் பின்னர் மன்னன் ஒருவனை அடைந்து பல சீர்வரிசைகளைப் பெற்றுக்கொணர்ந்த பெரியார் ஒருவர் தம்துணைவியைநோக்கி: "பெண்ணே! இதோஇவைகள் வள்ளன்மைமிக்க நல்லான்வழங்கிய வரிசைப்பொருள், இவற்றை நீ விரும்புவோர்க்கும்கொடு, உன்னை விரும்புவோர்க்கும் கொடு, உன்சுற்றத்தார்க்கும் கொடு, நம்பசிதீரப் பலநாள் கடனுகப் பொருள் கொடுத்தாருக்கும் கொடு, இன்னுர்க்கு என்று வரையறைசெய்யாது கொடு, என்னைக்கேளாமலும் கொடு, இப்பொருள்கொண்டு யாம்திறம்பட வாழலாமேஎன எண்ணுதே"—என்று கூறிய தான வரலாறு. உள்ளத்தை உருக்குகின்றது.

இப்படியாக அக்காலத்தமிழ் மக்களில் ஈவோர் பெறுவோர்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## மடுமாதா தோத்திரப் பதிகம்

விருத்தம்

I

தூயோய் வாழ்க! வரமழைதான் சொரிவோய் வாழ்க!
தொல்லறத்தின்
தூணே வாழ்க! சொர்ணமயச் சுடரேவாழ்க! துன்புற்றுர்
ஆயேவாழ்க! ஞானத்தின் அணியேவாழ்க! சம்மனசோர்
அரசிவாழ்க! அடைக்கலத்தின் அன்னுய் வாழ்க! அவனிக்
கோர்
தாயேவாழ்க! தவித்தவரின் தடாகஊற்றே! தண்ணருள்தான்
தந்தாய் வாழ்க! நடுக்கடலின் தயங்காச்சோதி! எம்தஞ்சம்
நீயே வாழ்க! மருதமடு நிலவே வாழ்க! எங்கள்மன
நிறைவே வாழ்க! செபமாலை நிதியே வாழ்க! வாழுகவே!

II

அருமைத்தாயே நமஸ்காரம்! அன்பின்சுனையே நமஸ்காரம்!
அருளின்வற்றுச் சமுத்திரமே அறத்தின்வடிவே நமஸ்காரம்!
கருணைக்கடலே நமஸ்காரம்! கற்பின்அரசி நமஸ்காரம்!
கன்னி மரியே திரித்துவத்தின் கமலமலரே நமஸ்காரம்!
இருளின்ஒளியே! வாடாத இனியரோசா நமஸ்காரம்!
யேசுபரனை ஈன்றெடுத்த எங்கள்தாயே! நமஸ்காரம்!
மருதமடுவி லிருந்தெங்கள் மனையிற்காட்சி தருசுகுண!
மணியே! மகிழ்ந்தோம் செபமாலை மரியே! பணிந்தோம்
நமஸ்காரம்!

III

பொன்னுலக மன்னனைப் பெற்றெடுத் தன்பினெடு
பூங்கரந் தன்னிலேந்திப்
பொங்குமகிழ் பூத்திடும் புதுமைதவழ் அன்னையே!
பொல்லாத வாழ்வுபூண்டு
துன்னிவரும் உமதுபதி மன்னுதற் கெத்தவம்
தொல்லுலகிற் செய்தமம்மா!
சோடிழுந் தன்றிலாய் வாடிடுந் துன்பவிருள்
துடைக்கவா னெழுந்தசோதி!
இன்னிசைகள் பாடினேம் பொன்னடன மாடினேம்
எழின்மலர்கள் சூடினேமிங்
கேற்காத பாவமயல் போக்கியே நின்படிவம்
ஏற்றினேம் இதயமீது
சென்னிமிசை போற்றிடுங் கன்னியர்கள் அரசியே!
தேசுலா மடுவில் வாழும்
செங்கமல லீலியே! எங்கள்தவ மூலியே!
திவ்யசெப மாலைமரியே!

IV

காரினைப் பழித்தகருங் கூந்தலும் அன்றலர்செங்
கமலமலர் வென்றமுகமும்
கடலெனக் கருணைபொழி கயல்விழியும் தொண்டையங்
கனியதனை வென்றவிதழும்
சீரியலு வெண்டரள மூரலும் ஞானமெனுந்
திருவமுது பொங்குதனமும்
செய்யசெப மாலைமணி யேந்துபூங் கரங்களும்
திங்கள்தனை யணிந்தபதமும்
சூரியனைப் போர்த்ததிரு வாடையதும் ஆடிவருந்
தோகைமயில் வென்றவியலும்
தொல்புவியிற் கண்டுகளி கொள்ளுதற் குந்தனருட்
சோதிதனைக் காட்டவேண்டும்
மாரியெனச் சோருகண் ணீரதனுள் தோய்ந்துனது
மலர்ப்பதம் தேடிவந்தோம்.
மருத மடுவாழும் அன்னையே! பொன்கரம்
வாரியணைத் தாளுமம்மா.

"ஞானி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

### பிலிப்பைன் ஸ்தானிகர்

பரிசுத்தஸ்தானத்தினிடமாகப் பிலிப்பைன் இராச்சிய முதல் ஸ்தானிகராக நியமனஞ்செய்யப்பெற்ற டக்றர் இம்மனுவேல் மோறன் அவர்கள் இம்மாதம் 4-ந்திகதியன்று வத்திக்கான் மாளிகைசென்று தமது நியமன அதிகாரப்பத்திரங்களைப் பரிசுத்தபாப்பரசரிடம் சமர்ப்பிக்கலாயினர். வத்திக்கானும், பிலிப்பைனும் தங்களிடையே இராசீய உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளச் சென்ற வைகாசி மாதத்தில் உடன்பட்டுக்கொண்டன. இதுவரை பிலிப்பைனிலே அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாய் இருந்துவந்த மொஞ்.எஜிபியோ வாக்னஸ் அதிமேற்றிராணியாரே அங்கு புதியவத்திக்கான் ஸ்தானிகராக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார். பிலிப்பைன் இராச்சியத்தில் வசிக்கின்ற 1 கோடியே 90 லட்சம் மக்களில் 1 கோடியே 46 லட்சம் பேரும் கத்தோலிக்கரே.

### லூர்துபதியிற் குணமடைந்தாள்

இங்கிலாந்திலே காடிவ் மேற்றிராசன லூர்துபதி முதல்யாத்திரை சென்றவைகாசிமாத முதல்வாரத்தில் நடந்தேறியது. இதிலே அறுநூறுபேர் கலந்துகொண்டார்கள். இவர்களிலே தூக்கிச்செல்லும் கட்டில்களிற் கொண்டுபோகப்பெற்ற பதின்மர்உட்பட அறுபது பிணியாளருமிருந்தனர். இப்பிணியாளருள் தெரேசா வால்ற்றேர்ஸ் எனும் 28 வயசுடைய மாது இருவருடகாலமாக நடந்துகொள்ளவியலாது பாயும் படுக்கையுமாகக்கிடந்தவள். முதுகெலும்பு சம்பந்தமான க்ஷயரோகங் கண்டு வருந்தியகாரணமாகப் பிளாஸ்றர் கொண்டுசெய்த கவசம் தரித்திருந்தாள். இவள் லூர்துதிருப்பதிசேர்ந்து, அங்கு எல்லோருமே கண்காண அற்புதமாகக்குணமடையலாயினள்.

### முத். ஜூலியன்மோனேயிர்

பிரான்சிலே 17-ம்நூற்றாண்டில் கிரீச்சுரவாதிகளான பிறிற்றனியர்கள் மத்தியில் வேதம் போதித்து, அவர்களை வேதவைராக்கியம்படைத்த கத்தோலிக்கராக்கிவைத்தஆசா.ஜூலியன் மொனேயிர் சுவாமிகள் சென்ற வைகாசிமாதம் 20-ந்திகதி ஞாயிறுவாரம் முத்திப்பேறுபட்டம் சூட்டப்பெற்றபோது, பிறிற்றனியைச்சேர்ந்த ஹென்னெஸ் நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் றேக்குவெஸ் ஆண்டவர்தலைமையில் 300 பிரான்சிய யாத்திரிகர்கள் உட்பட 45,000 பேர் அர்ச்.பேதுருவானவர்மகாலயத்தின்கண் பிரசன்னமாயிருந்தனர். இவர்களுடன் பிரான்சியமந்திரிசபை உபதலைவரின் பாரியாராகும் ஸ்ரீமதி பிதோ அவர்களும், புதிதாக முத்திப்பேறு பெற்றவரின் சலிகையால் குணமடைந்த ஸ்ரீமதி லேகொவ் பேர்னே எனும் மாதும் சென்றிருந்தனர். அன்று சாயந்தரம் பாப்பரசர் முத். ஜூலியனுக்குத் தமது வணக்கத்தைச் செலுத்துமாறு ஏழு கருதினல்மார், 60 மேற்றிராணிமார்சமேதராய் மகாலயஞ்சென்றார். முத். ஜூலியன் பிறிற்றனியர்களிடையே 42 வருடகாலம் தொண்டாற்றினர். அவர்களின் பாஷையை மூன்றுநாட்களிலே கற்றுக்கொண்டார். வேதபுத்தகத்தை அவர்கள் பாஷையில் மொழிபெயர்த்தார்.

### இரட்டையரான சகோதரிகள்

இரட்டைப்பிள்ளைகளான கபிரியேல் வித்னெல், சங். பேர்பெற்றுவா வித்னெல் எனும் கன்னிகாஸ்திரீமார் இருவரும் இங்கிலாந்திலே வோர்செஸ்றரைச்சேர்ந்த ஸ்ரான்புறாக் மடத்திலே தாங்கள் கன்னிகா அந்தஸ்தில் உட்பட்ட அறுபதாம் ஆண்டு வைரயூபிலியைச் சமீபத்திலே கொண்டாடினார்கள். இவர்கள் அங்கே ஒக்ரன் நகர்வாசியான திரு. வில்லியம் வித்னெல் என்பவரின் புதல்விகள். இவருடைய பதின்மூன்று பிள்ளைகளில் நால்வர் குருமாராக, மூவர் கன்னிகாஸ்திரீமாராயினர். யூபிலி விழாவின் போது, அவர்களின் சகோதரரான வண. ஒஸ்கார் வித்னெல் சுவாமியார் திவ்வியபூசைநிறைவேற்றினர். இவர்களின் மற்றோர் சகோதரரான வண. ஜோண் வித்னெல் சுவாமியார் தென்றொடேஷியாவில் திருத்தொண்டாற்றி வருகின்றார். லிவர்ப்பூல்நகர கார்மேல்சபை மடத்தின் சிரேஷ்டதாயார் இவர்களின் சகோதரியாவர்.

### இராசீயசாஸ்திரகழகம்

வத்திக்கானின் இராசீயஸ்தானிகர்கள், பிரதிநிதிகளைப் பயிற்றுதற்கென்று றோமாபுரியில் இருந்துவருகின்ற பாப்பரசரின் சாஸ்திரகழகம் ஸ்தாபகமான 250-வது நிறைவுவிழா சென்ற வைகாசிமாகம் கொண்டாடப்படலாயிற்று. இப்பேரான கழகத்திலே இதுகாலவரை நான்கு பாப்புமாரும், பாப்பரசின் இராச்சியமந்திரிமார் ஆறுபேரும், கருதினல் மனிங், கருதினல்வாண் என்பவர்கள் உட்பட 98 கருதினல்மாரும் பயிற்சிபெற்றிருக்கின்றனர். தற்போதைய 12-ம்பத்திநாத பாப்பரசர் ஓர் காலம் இதன் கருதினல்பரிபாலகராயும், அநேகவருடகாலம் இதிலே ஓர் இராசீய சாஸ்திர பேராசிரியராயும் இருந்துவந்தார். 13-ம் கிளமேந்து, 12-ம் லேயோ, 13-ம் லேயோ, 15-ம் ஆசீர்வாதப்பர் எனும் பாப்புமார் நால்வரும் இதிலே பயின்றவர்கள். இதன் பழைய மாணவர்களுள் 42 பேர் அப்போஸ்தலிக்க ஸ்தானிகர்களாக, நால்வர் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதிகள் ஆனார்கள். ஆயின் வத்திக்கான் இராசீய ஸ்தானிகர்கள், பிரதிநிதிகள் எல்லாரும் இதிற் பயில்வதுமில்லை. அதன் மாணவர்கள் எல்லோரும் அப் பதவிகள் வகிப்பதுமில்லை.

## இஸ்பிரீ. ஆக. பின்வரும் 6-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு
(மாற். 8: 1—9)

அக்காலத்தில் திரளான சனக்கும்பல் இருக்கையில், உண்பதற்கு அவர்களுக்கு ஒன்றுமில்லாதபோது யேசுநாதர் தம்முடைய சீஷர்களை அழைத்து அவர்களுக்குத் திருவுளம் பற்றினதாவது: இந்தச் சனங்கள் மேல் இரக்கமாயிருக்கிறேன். ஏனெனில், இதோ! இவர்கள் இப்போது மூன்றுநாளாய் என்னிடத்தில் தங்கி, உண்பதற்கு ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களைத் தங்கள் வீட்டுக்குப் பட்டினியாய் அனுப்புவேனேயாகில்வழியிற்சோர்ந்துபோவார்கள். ஏனென்றால், அவர்களில் சிலர் தூரத்திலிருந்து வந்திருக்கிறார்கள்என்றார். அவருக்குமறுமொழியாக அவருடைய சீஷர்கள்: வனாந்தரமாகிய இவ்விடத்தில் ஒருவனால் எங்கேயிருந்து அப்பங்களைக் கொண்டுவந்து அவர்களைத் திருப்தியாக்கக் கூடும்? என்றார்கள். மீளவும் அவர்: உங்களிடத்தில் எத்தனை அப்பங்கள்உண்டு என்று அவர்களைக் கேட்க; அவர்கள்: ஏழு என்றார்கள். அப்போது அவர் தரையிற்பந்திஅமரக் கும்பலுக்குக் கட்டளையிட்டார். அவர் ஏழப்பங்களையும் எடுத்து நன்றியறிந்ததோத்திரஞ்சொல்லி, அவைகளைப் பிட்டுச் சனத்துக்குப் பரிமாறும்படி தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார். ஆதலால், அவர்கள் கும்பலுக்குப் பரிமாறினார்கள். அவர்களிடத்திற் சிலசிறு மீன்களும் இருந்தன. அவர் அவைகளையும் ஆசீர்வதித்துப் பரிமாறக் கட்டளையிட்டார். சனங்கள்சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள். மேலும் மீதியான துண்டுகளை ஏழு கூடைகள் நிறையஎடுத்தார்கள். சாப்பிட்டவர்களோவெனில் ஏறக்குறைய நாலாயிரம்பேராயிருந்தார்கள். பின்பு அவர் அவர்களை அனுப்பிவிட்டார்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக!

## ஒன்பதாவது பெரிய ஆலயம்

தம்மைக் கௌரவிக்குமாறு உலகிலுள்ள நாற்பதுகோடி கத்தோலிக்க மக்களாலும் கட்டியெழுப்பப்பெற்ற நவமான ஆலயம்ஒன்றை ஆட்சிகொள்வதற்காகப் பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர் இம்மாதம் 2-ந்திகதியன்று வத்திக்கான்மாளிகையினின்றும் வெளிகொள்ளலாயினர். றோமாபுரியிலுள்ள ஒன்பதாவது மிகப்பெரிதான இந்தஆலயம் பாப்பரசரது மேற்றிராணித்துவ அபிஷேக 25-ம்ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டாடுமுகமாகக் கட்டி அவர் பெயர்கொண்ட அர்ச். ஈயூஜினியாருக்கு அர்ப்பணஞ் செய்யப் பட்டுள்ளது. இத்திருவைபவத்துக்குப் 18 கருதினல்மாரும், 100 மேற்றிராணிமாரும், நூற்றுக்கணக்கான குருசிரேஷ்டர்கள், குருமாரும், வத்திக்கானிடமாக இருந்துவருகின்ற இராசீயப்பிரதிநிதிகளும் பிரசன்னமாயிருந்தார்கள். பாப்பரசர் ஆலயபெரியபலிபீடத்தை அபிஷேகஞ்செய்து, திவ்வியபூசைநிறைவேற்றி, அப்பீடத்திலே லவுறேஞ்சியார், ஆஞ்ஞேசம்மாள், ஐந்தாம்பத்திநாதர், பிலிப்புநேரியார், நிக்கொலா தா புளு, சியன்னைகத்தரீனம்மாள். பிரான்செஸ்கா கபிறினி முதலாம் அர்ச்சியசிஷ்டர்களின் திருப்பண்டங்களைச் சேமித்துவைத்தனர். திருவைபவம்முடிந்ததும் அவ்விசாரணைப்பங்கிலுள்ள வறியவர்களுக்குப் பத்துலட்சம் லயர் பகிர்ந்துகொடுக்குமாறு பரிசுத்தபிதா ஆஞ்ஞாபித்தனர். வத்திக்கானிலிருந்து இப்புதிய ஆலயம் மூன்றுமைல் தூரத்திலுள்ளது. இதிலே ஒன்பது பாரியமணிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

## அரசபெருமானின் ஜனனவிழா

அரசபெருமானின் ஜனனவிழாவானது பலாலி, அரசினர் ஆசிரியகலாசாலையிலே விளையாட்டுப்போட்டியுடனும், கதம்பக்கச்சேரியுடனும் குதூகலமாகக் கொண்டாடப்பட்டது. விளையாட்டுப்போட்டியில் கலாசாலைச் சூழலிலுள்ள ஐந்து சாதனபாடசாலைகள் கலந்துகொண்டன. இக்கொண்டாட்டத்துக்குப் போஷகராக வலிகாமம் வடக்குக் காரியாதிகாரி திரு. T. பாலச்சந்திரன் அவர்கள் அமைந்து நிகழ்ச்சியைச்சிறப்பித்தனர். போட்டியில் வெற்றிபெற்றோர்க்குக் கலாசாலை அதிபர் திரு. பி. சவிரிமுத்து அவர்கள் பரிசில்கள் வழங்கினர். இவ்விரு பெரியாரதும் அறிவுரைகள் சபையோர்க்குப் பெருவிருந்தாயமைந்தன. கட்டுவன் ஞானோதய வித்தியாசாலை இப்போட்டியில் முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. பிற்பகல் 6-30 மணிக்குக் கலாசாலையின் மூன்று மாணவ இல்லங்களாலும் ஓர் கதம்பக் கச்சேரி நிகழ்த்தப்பெற்றது. இதற்கு வலிகாமம் வடக்குப் பிரதம வைத்தியாதிகாரி டக்றர் பார் குமாரகுலசிங்கி அவர்கள் போஷகராக விளங்கினர். இல்லங்களில் முதன்மைபெற்ற இரத்தினம் இல்லத்திற்கு இவரது பாரியாரால் ஓர் வெள்ளிக்கிண்ணம் வழங்கப்பெற்றது. இவ்வெள்ளிக்கிண்ணம் காலம்சென்ற அதிபர் திரு. N. சண்முகரத்தினம் குடும்பத்தாரால் அவர் ஞாபகார்த்தமாகக் கலாசாலைக்கு அளிக்கப்பெற்றதாகும். ஈற்றில் மாலை 8-30 மணியளவில் கலாசாலை மாணவதலைவர் திரு. வை. பொன்னையா அவர்களால் இக்கொண்டாட்டத்தில் கலந்துகொண்டசகலர்க்கும் நன்றிகூறப்பட்டு நிகழ்ச்சிகள் இனிதுற்றன. இதன் தொடர்ச்சியாகக் கலாசாலையார்க்கும், ஐக்கியகிறீஸ்தவ கலாசாலையார்க்குமிடையில் மறுநாள் நிகழ்ந்த கரபந்தாட்டப்போட்டியில் முன்னையோர் வெற்றிபெற்றனர்.

K. S.

—பாகிஸ்தான் பெற்றோலியம் கம்பெனி சென்ற 1950-ம்ஆண்டு தை முதல் நடத்தியபரிசோதனையின்விளைவாய் அங்கு பஞ்சாப்மாகாணத்தைச் சேர்ந்த சாக்வால்எனுமிடத்தில் எண்ணெய்இருக்கக் கண்டுபிடித்திருப்பதாய் அறிவிக்கப்படுகிறது. பரிசோதனை நடத்தவென்று தோண்டப்பட்ட கிணறு 8,212 அடி ஆழமுடையதாம். இதிலிருந்து எவ்வளவு எண்ணெய் எடுக்கமுடியும்என்பதுபற்றி இப்போது சோதனை நடைபெறுகின்றதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது வர்த்தமானம்

### துருக்கியின் ஆயத்தம்

மாஷல் உதவிப்பணமுட்பட அமெரிக்கஉதவியைப்பெற்றுத் துருக்கிஅரசு மேற்குஐரோப்பியநாடுகளின் பாதுகாப்புமட்டிலே பெரும் உத்தரவாதங்களை ஏற்றுக்கொள்ள முன்வந்துள்ளது. தனதுநாட்டிலேயேபெற்றுக்கொண்ட அதிகமான பணவுதவிகொண்டு அதன் ஆயுதபலங்கள் இக்காலத்து நவீன மாதிரியாக்கப் பட்டிருக்கின்றன. தனதுபாதுகாப்புச் சேனபலங்களுக்கென அது 37 கோடியே 70 லட்சம் பவுண் செலவிட இற்றைக்கு மூன்று வருடங்களின்முன் இணங்கியது. ஒரு வருடத்தின்பின் இந்தத்தொகை 8 கோடியே 50 லட்சம்பவுனால் அதிகரித்தது. ஆனல், கடந்த பன்னிரு மாசங்களிலும் அமெரிக்க உதவிப்பணமாக 8 கோடியே 80 லட்சம் பவுணைப்பெற்று அத்தொகை மேலும் 10 கோடி பவுணுக்குமேல் அதிகரித்திருக்கிறது. தற்சமையம் ரூஷியாவில் ஓர்கண்ணை எறிந்தவண்ணம் துருக்கி ஐந்துலட்சம்போர்வீரருக்கு மேற்பட்ட ஓர்சேனபலத்தைக்கொண்டிருக்கின்றது.

### மனித தோல்வங்கிகள்

இரத்தம் தேவைப்படுகின்ற நோயாளர்கள், காயமடைந்தவர்களின் சரீரத்தில் செலுத்துதற்கென்று மனித இரத்தம் சேகரித்துவைக்கப்படும் "இரத்தவங்கிகள்" ஆஸ்பத்திரிகளில் தற்போது இருந்துவருகின்றன அல்லவா? அதேமாதிரியாக இனிமேல் ஆஸ்பத்திரிகளில் "மனிததோல் வங்கிகள்" ஸ்தாபிக்கப்படவிருக்கின்றன. சரீரத்தில்ஏற்படுகின்ற பெருந்தோற்காயங்களிலே தோல்உபகாரிகள் உதவுகின்ற தோற்துண்டுகளைப்பொருத்தி அவைகளைக்குணமாக்கிவிட முடியுமெனத் தற்போது ஆராய்ச்சியிலே கண்டறியப்பட்டிருக்கிறது. சத்திரவைத்திய முறையில் இது பெரியதோர் முன்னேற்றமாகுமாம். இதுவரை காயம் அடைந்தவரது சரீரத்தின் மற்றோர் பகுதியிலிருந்தே தோல்எடுத்துக் காயத்தில்பொருத்தி ஒட்டப்பட்டுவந்தது. பேர்மிங்காம் சர்வகலாசாலையைச் சேர்ந்த விஞ்ஞானிகள்மூவரால் குழிமுயல்களில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியிலிருந்தே இப்புதியமுறை கண்டுபிடிக்கப்படலாயிற்று.

### கோழிகளின் தீவிரவளர்ச்சி

பிரித்தானியிலே கோழிகள், வாத்துகள், தாராக்கள்முதலாம் வீட்டுப்பறவைகளைத் தீவிரமாக வளரச்செய்வதற்காக அவற்றின்உணவுகளிலே பெனிசிலின், ஓறியோமிசின், ஸ்றெப்ரோமிசின் முதலாம் மருந்துகள் கலக்கப்படுகின்றன. லண்டன்நகருக்குவெளியேயுள்ள ஆராய்ச்சிப்பண்ணை ஒன்றில் சிலகாலமாக இதுசம்பந்தமான பரிசோதனைகள் நடைபெற்றுவருகின்றன. அங்கே இந்தமருந்துகள்சேர்த்தஉணவுகள்கொடுத்து வளர்த்தகோழிக்குஞ்சுகள் வழமையான ஐந்துவாரவளர்ச்சியை ஒருமாதத்தில் அடைந்திருக்கின்றன. அவற்றிற்சில ஒருமாதத்தில் ஒருறாத்தலுக்குமேல் நிறையுடையனவாய்இருந்தன. வழமையிலே அவைகள் ஒன்றேகால்றாத்தல் நிறையுடையனவாக இரண்டுமாதங்கள்வரையிற் செல்லும். வான்கோழிகளும் அதேவிதமாக நிறையில்அதிகரித்தன.

### ஐ. நா. தபால்முத்திரைகள்

ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் பாவனைக்கு விடுக்கப்போகும் முதற் தபால் முத்திரைகள் வருகிறபுரட்டாசியிலே விற்பனைக்குள்ளாகவிருக்கின்றன. இவற்றுள்ஒன்று ஐ. நா. கொடியையும், மற்றொன்று நியூயோக்நகரிலுள்ள ஐ. நா. தலைமைக் காரியாலயத்தையும் காண்பிக்கும். இருஇனமான ஆகாயத்தபால்முத்திரைகள் ஐ. நா. கொள்கையை வர்ணிப்பனவாகும். சீன, ஆங்கில, பிரான்சிய, ரூஷிய, ஸ்பானிய பாஷைகளே ஐ. நா. உத்தியோகபூர்வமான ஐந்து பாஷைகளுமாகும். இவ்வன்றமட்டும் அதிகமானமுத்திரைகளில் இப்பாஷைகள் பிரயோகிக்கப்படும். சகலமுத்திரைகளிலும் "ஐக்கியநாடுகள்" [illegible] திருக்கும்.

## பரீஸ்நகர் மகாநாடு

உலகஅரசியல் பிரச்சினைகளில் மேற்குவல்லரசுகளுக்கும் ரூஷியாவுக்குமிடையே இருந்துவரும் தகாறுகள்சம்பந்தமாக ஓர்சமரசமுடிவுக்கு வரும்நோக்கத்துடன் நான்குவல்லரசுகளின் வெளிநாட்டுமந்திரிகள் மகாநாட்டைக்கூட்டுவதற்கு ஓர் முன்னேற்பாடாகப் பரீஸ்நகரில் நடைபெற்றுவரும் நான்குவல்லரசுகளின் உதவி வெளிநாட்டுமந்திரிகள்மகாநாடு அனுமாரின்வால்போன்று நீண்டுகொண்டே போகிறது. மூன்றுமாதமாக நடைபெற்றுவரும் இம்மகாநாட்டில் வெளிநாட்டுமந்திரிகள் மகாநாட்டின் ஆலோசனைக்காகத் தயாரிக்கப்பட்டுவரும் விஷயஅட்டவணை சம்பந்தமாக இன்னும் ஒருவிதமான முடிவும் ஏற்படவில்லை.

இதுசம்பந்தமாக மேற்கு வல்லரசுகள் ரூஷியாவுக்கு ஓர்கடிதம் அனுப்பியிருந்தன. அதற்கு ரூஷியா அனுப்பியபதில், மூன்றுமாதங்களுக்குமுன் எவ்வித நிலைமை அம்மகாநாட்டை எதிர்நோக்கியிருந்ததோ அதே நிலைமைக்குத் திரும்பவும்அதைக் கொண்டுவந்துவிட்டது. அப்பதிலில் ரூஷியா புதியகோரிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளது. வல்லரசுகளின் வெளிநாட்டு மந்திரிகள் மகாநாட்டில் அத்திலாந்திக் உடன்படிக்கைபற்றியும், ஐரோப்பாவிலும், சமீபகிழக்கு நாடுகளிலும் அமெரிக்காஅமைத்துள்ள தளங்களைப் பற்றியும் விவாதிக்கப்படவேண்டும்; ஆதலால், இவ்விருகருமங்களையும் மகாநாட்டின் விஷயஅட்டவணையில் சேர்க்கவேண்டுமென அது கோரியிருக்கிறது.

ஆரம்பத்திலே விஷய அட்டவணையில் ஜேர்மனியை மீண்டும் ஆயுதபாணியாக்கும் பிரச்சினை சேர்க்கப்படவேண்டுமென வற்புறுத்தியபோதே, சமாசமுடிவு ஏற்படாதிருக்க ரூஷியா முட்டுக்கட்டை போடுகிறதென்று மேற்குவல்லரசுகள் சுட்டிக்காட்டின. தான் முன்னர் செய்துள்ள உடன்படிக்கைகளை அது மீறி ஜேர்மனியின் ஒற்றுமையை எதிர்த்துப் பேர்ளின் நகரை முற்றுகைநிலையில் வைத்திருப்பதையும், கிழக்குஐரோப்பிய நாடுகளை ஆயுதபாணியாக்கிவருவதையும் கிழக்கு ஐரோப்பிய எல்லையில் இராணுவங்களைத்திரட்டி நிறுத்தி வைத்திருப்பதையும் யாவரும்அறிவர். தான் செய்துவரும் இவ்வித குற்றங்களை மறைப்பதற்காகவே ரூஷியா வல்லரசுகளின் மகாநாட்டுக்கு முட்டுக்கட்டை போட்டுவருவதாக அப்பொழுதே மேற்குவல்லரசுகள் கருதின.

ரூஷியாவின் ஆக்கிரமிப்புநடவடிக்கைகளை முன்னிட்டு அதைஎதிர்த்துத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடனேயே மேற்குநாடுகள் அத்திலாந்திக் உடன்படிக்கை செய்துவருகின்றன. அமெரிக்கா தளங்களைநிறுவவும் அனுமதித்திருக்கின்றன. இப்பொழுது ரூஷிய கோரிக்கைப்படி நான்கு வல்லரசுகள் மகாநாட்டின் விஷயஅட்டவணையில் அத்திலாந்திக் உடன்படிக்கை, அமெரிக்கதளங்கள் ஆகிய விஷயங்களையும் சேர்த்துக்கொள்ளமறுப்பின் உலக சமாதானத்துக்கு மேற்கு வல்லரசுகளே முட்டுக்கட்டை போடுவதாக அவற்றின்மீது பழிசுமத்த ரூஷியா முற்படும். உலக சமாதானத்துக்கு இடையூறாகத் தான் இழைத்துவரும் குற்றங்களைமறைத்து மேற்குவல்லாசுகள்மீது பழிசுமத்த அது கைக்கொள்ளும் இத்தந்திரத்தைச் சுதந்திரஉலகம் நன்கறியும்.

---

இனி ஆற்றுதென்று கைவிடப்பட்டவர்களின்
தப்பாத ஆறுதலும், பாதுகாவலருமான

# அர்ச். யூதா ததேயுவின் சுருக்கமான சீவியவரலாறும் மற்றும் பத்தியனுசாரங்களும்

பரிமேலர் எஸ். அருளானந்தம், K. S. G.
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

பிரதி விலை சதம் 25. தபாற்கூலி பிரத்தியேகம்

கிடைக்கும் இடங்கள்:
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்.
கத்தோலிக்க புத்தகசாலை
அர்ச். பிலிப்புநேரியார் கோவில், புறக்கோட்டை.

---

## கருதினல் மனிங் ஆண்டவர்

இற்றைக்கு நூறுவருடங்களின் முன் இங்கிலாந்திலே சிசெஸ்றரின் அத்தியட்சகராய் விளங்கியிருந்த தமது பழையநண்பராகிய ஹென்றி எட்வாட் மனிங் அவர்கள் கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்துகொள்வதற்காக அங்கிளிக்கன் புறொட்டஸ்தாந்தசபையை விட்டுவிலகிய போது கிளாட்ஸ்ரன் மந்திரியார் தமது சீவியகாலத்தில் என்றைக்குமேயில்லாத பெருந்திகிலும், அதிர்ச்சியும் கொள்ளலாயினர். பிந்தத் திருச்சபையின் கீர்த்திவாய்ந்த ஓர் ஆங்கிலேய கருதினலாகவும், "றேறும் நொவாறும்" என்ற தொழிலாளர்சாசனம்பற்றிய பேரான சாதாரண நிருபத்தைப் பதின்மூன்றும் சிங்கராய பாப்பானவர் வெளியிட்டமையால் மகா உச்சநிலையடைந்த கத்தோலிக்க சமூகதிருத்த இயக்கத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவருமாகப் பிரஸ்தாபம்பெற்றிருந்தவர்கருதினல்மனிங்ஆண்டவரே. இவர் மனந்திரும்பிய நூறும் ஆண்டுநிறைவின் ஞாபகார்த்தமாக லண்டன்நகரிலுள்ள சம்மனசுகளின்மாதா கோவிலிலே சென்ற வைகாசி மாதம் 13-ந் திகதி ஞாயிறுவாரம் நிறைவேறிய பெரியபாடற்பூசைக்குச் சமூகமளித்திருந்த பன்னூற்றுக் கணக்கான பேர்களிலே அவரை அறிந்தவர்களான வயோதிகர்கள் மூவரும் அடங்கியிருந்தார்கள். இவர்களில் ஒருவர் 84 வயசுடையவரான வண. பிரான்சீஸ் ஹோர் சுவாமியார். இவர் பார்வைக்குப் பலமற்ற நொய்யவராய் ஓர் ஊன்றுகோலின் உதவியுடன் அங்கு நடந்தார். கருதினல் மனிங் ஆண்டவர் 1882-ம் ஆண்டு தாம் கடைசிமுறையாகஅருளிய குருப்பட்டத்தின்போது இவரை உபதியாக்கோனக அபிஷேகஞ் செய்திருந்தார். சென்றவருடம் இவர் தமது குருத்துவ வைரயூபிலியைக் கொண்டாடினர். மனிங் ஆண்டவரை அறிந்தோரான ஏனையஇருவரும் சகோதார்களான இருகத்தோலிக்கரோ. இவர்கள் 90 வயசுடையவரான திரு. ஜேம்ஸ் சென் லோறென்ஸ், 84 வயசுள்ளவரான திரு. ஜோண் சென் லோறென்ஸ் என்பவர்களே. பிந்தியவரைக் கிறிக்கெற்விளையாடப் பயிற்றியவர் மனிங் ஆண்டவரே.

## படகுப் போட்டி

ஊர்காவற்றுறை

அன்று 10-30 மணியிருக்கும். கதிரவனின் கடும்வெப்பம், மிகவும் கொடூரமா யிருக்கவில்லை. அர்ச். அந்தோனியார் கல்லூரிவிழாவைக் கொண்டாடும்பொருட்டு, படகுப் போட்டிஒன்று ஊர்காவற்றுறைமுகத்தில் நடந்தேறியது. முதலாவதாக மாணவர்களிடையே போட்டிநடைபெற்றது. இதனைப்பார்த்துமகிழத் திரளான மாணவர்களும், பெரியோரும் கூடியிருந்தனர். காரைதீவுக்கரையிலிருந்து படகுகள் வெளிகிளம்பின. மூன்றுகழகத்தினருடையவும் மூன்று படகுகளும் இயன்ற பிரயாசையெடுத்தும் ஈற்றில் அர்ச். அக்குவினஸ் கழக மாணவர்களே வெற்றிபெற்றனர். அதன்பின் நடந்த போட்டியிலும் அவர்களே வெற்றியடைந்தனர்.

அதன்பின் தற்போதைய கல்லூரி மாணவர்களுக்கும், கல்லூரிப் பழைய மாணவர்களுக்குமிடையே போட்டி நடைபெற்றது. இதுவே எல்லோரதும் கவனத்தை ஈர்த்தது. இருகோஷ்டியினரும் இயன்றமட்டும் முயன்றபோதிலும் வழமையில் வெற்றிபெறும் கல்லூரிப் பழையமாணவர்களே அதில் வெற்றிஈட்டினர். ஈற்றிலே போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள் அனைவரும் மிகுந்தகுதூகலத்துடன் தேநீர் உபசாரணையில் கலந்துகொண்டார்கள். போட்டிகளில் வெற்றிஈட்டியவர்களும், பங்குபற்றியவர்களும், ஊர்காவற்றுறையைச்சேர்ந்த மாணவர்களேஎன்பது ஈங்குகுறிப்பிடத்தக்கது. இலங்கையில் நடைபெறும் படகுப்போட்டிகளில் ஊர்காவற்றுறைப் படகுப்போட்டியும் சிறந்துவரக்காண்பது சந்தோஷமே.

S. J. R.

---

## கல்லோயாவும்நெற்செய்கையும்

கல்லோயா அபிவிர்த்திச் சபையானது அங்கே வருகிறபுரட்டாசி மாதத்திற்குமுன் நெல்லும், பிறதானியங்களும் செய்கைபண்ணுதற்கென்று இருபதினுயிரம் ஏக்கர் காட்டுநிலத்தைத் துப்புரவுசெய்வதில் தீவிரமாக ஈடுபட்டுவருகிறது. அங்கு ஐம்பது ஏக்கர்நிலத்தில் ஏலவேதானே கரும்பந்தடிகளும், நாற்றுத்தேங்காய்களும் நாட்டப்பட்டுள்ளன. அதிகவிரைவிலே அப்பகுதியில் 200 குடும்பங்கள்வரையில் குடியேற்றப்படவுமிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ் சபை

இச்சபையின் மாதாந்தக் கூட்டம் இம்மாதம் 29-ந் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு அர்ச். ஞானப்பிரகாசியார் கூட்டச்சாலையில் நடைபெறும். அச்சமயம் இரு சகோதரர்கள் வாக்குத்தத்தம் எடுப்பார்கள், நால்வர் நவாப்பியாசகாலம் தொடக்குவார்கள். ஆடிமாதம் பின்வரும் திகதிகளில் பரிபூரணபலன்களை அடைந்துகொள்ளலாம்:— 8, 9, 11, 14, 21 (2), 23, 26, 27. ஆடிமாதம் 2-ந் திகதி பொதுப் பாவமன்னிப்பு இருக்கும்.

A. S. FRANCIS OF MARY
for Director

## திருநாள் அட்டவணை

ஆனிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 22 | அர்ச். பவுலீனப்பர் | (வெ) |
| சனி | 23 | அர்ச். எதில்திருத் தம்மாள் | (ஊ) |
| ஞா | 24 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 6-ம் ஞாயிறு— அர்ச். ஸ்நாபக அருளப்பர் | (வெ) |
| திங் | 25 | அர்ச். உவில்லியம் | (வெ) |
| செ | 26 | அர்ச். அருளப்பர், சின்னப்பர் | (சி) |
| புத | 27 | அர்ச். லதிஸ்லாஸ் | (வெ) |
| வியா | 28 | அர்ச். இறெனேயுசப்பர் | (சி) |

சத்தியவேத
பாதுகாவலன்
1951-ம் ஆண்டு
ஆனிமாதம் 21-ந் திகதி

## மருதமடு யாத்திரை

திரிலோகநாதனைச் செங்கரத்தேந்தியவராய் மருதமடுத் திருக்ஷேத்திரத்தின்கண்ணே திவ்வியசிம்மாசனங்கொண் டெழுந்தருளி அருள்மாரி பொழிகின்ற பரிசுத்த செபமாலை இராக்கினியின் ஆடிப் பெரிய மகோற்சவத்தின் ஆரம்ப வைபவமாக நாளை நின்றுவரும் 23-ந் தேதி சனிவாரம் துவசாரோகணமாகவிருக்கின்றது. அதனுல் கானகத்திடையே எழுந்தருளிக் காட்சியளிக்கின்ற வானோர்க்கரசியான அப்பரமநாயகியின் கமலபாதத்தை — அவரது கிருபாசனத்தைநாடி, மக்கள் பெருந்திரளாக யாத்திரைசெய்யும் பெரியயாத்திரைகாலமும் வந்திருக்கிறது. பூர்வத்திலே தேவப்பிரசைகளான இசிறவேலர்கள் பரிசுத்தகானூன் தேசத்தின் கடைசி எல்லைகளினின்றும் ஜெருசலேம் தேவாலயத்தை நோக்கித் திருயாத்திரையாகப் புறப்பட்டுத் தேவநாமத்தைப் புகழ்ந்துகொண்டும், திவ்வியகீதங்களைப் பாடிக்கொண்டும் கூட்டங்கூட்டமாகச் செல்வதைக் காணுந்தோறும் அஃதுபெரும் ஆனந்தப்பரவச காட்சியாயிருக்குமாம். அவ்வாறே ஸ்ரீலங்காவின்கடைசிஎல்லைகளினின்றும் மருதமடுத் திருக்ஷேத்திரத்தைநோக்கிப் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் யாத்திரைபுறப்பட்டுச் செபமாலைத்தாயாரையும், அவரது திருக்குமாரனையும் துதித்துக்கொண்டும், திவ்வியகீதங்களைப் படித்துக்கொண்டும், செபமாலையைப் பயபக்தியாகச்செபித்துக்கொண்டும் செல்வதைக் காணுந்தோறும் இஃதும் ஓர்மனோகரம் உண்டுபண்ணும் காட்சியாகுமன்றோ! திரிபுவனங்களையும், அகிலசராசரங்களையும் படைத்துக்காக்கும் பராபரனை இந்த அவனியிற்பயந்தஅமலோற்பவியம், அற்புதங்கள்புரிய வரம்பெற்ற அர்ச்சியசிஷ்டர்களின் இராக்கினியுமான பரிசுத்த செபமாலைத்தாயார் மருதமடுத் திருக்ஷேத்திரத்திலே தம்மை நாடித் தேடிவருவாருக்கெல்லாம் மழைபோலப்பொழிகின்ற அருள்மழையை இந்த ஆடிப் பெரிய மகோற்சவம் இனிதே காண்பிக்கப் போதியதன்றோ! ஆமாம், அப்பதியானது ஓர் சுகஸ்தானமுமல்ல, அங்குநடப்பது முத்துச்சலாபமுமல்ல, கிடைப்பது யாதாமோர் புதையலுமல்ல. அங்ஙனமாக அத்துணைகஷ்டப்பட்டு, பணஞ்செலவிட்டு, இத்தனைதூரமெல்லாங் கடந்து அவர்கள் மடுப்பதிக்கு யாத்திரை போகவேண்டிய முகாந்திரமென்ன? அப்பதியிலே மனுக்குலத்தின் மாதாவாகிய தேவமாதா—செபமாலைமாதா பொழிந்துவருகின்ற அருள்மாரியேயல்லாது பிறிதொன்றுமல்ல. நிற்க,மாதாவை என்றைக்கும் மகிமைப்படுத்துவதும், சந்தோஷப்படுத்துவதும் மக்களின் குன்றாதகடமையாகும். அவரைமகிமைப்படுத்துகிறதானல், சந்தோஷப்படுத்துகிறதானல், அவர் ஆசிப்பதையெல்லாம் காதலாக நிறைவேற்றவேண்டும். அவர் கேட்பதையெல்லாம் கருத்தாகச் செய்யவேண்டும். பாத்திமா நாயகி இற்றைக்கோர் ஆண்டின்முன் எமக்குக் காட்சியளித்து நம்மிடம் ஆசித்துக் கேட்டருளிய செபதபத்தையும், விசேஷமாகச் செபமாலை செபிப்பதையும் நாம்காதலோடும், கருத்தோடும், மாதாவந்து கேட்டுவிட்டாரே யென்ற மனஆத்திரத்தோடும் செய்துகொண்டு வருமோமானல் நமது தெய்வஅன்னை உள்ளங்கனிந்து நாம்கேட்கும் வரங்களைத் தமது திருமகனரிடம் பெற்றளிப்பாரென நம்பியிருக்கலாம்.

## குருத்துவ வெள்ளியூபிலி

மானிடஆன்மாக்களை இரட்சிக்கும் மகா உந்நதஅலுவலைச் சர்வேசுரன் யாரிடம்ஒப்படைத்திருக்கின்றூர்? மானிடரிடமே அதாவது தமது ஊழியத்திற்கென்று தாம்தெரிந்துகொண்ட குருமாரிடமே ஒப்படைத்திருக்கின்றூர். அதனுல் ஓர் குருவானவரின் அலுவல் பெரிதும் உத்தரவாதம்மிகுந்த அலுவல். சத்தியத்தின் வார்த்தைகளைப்பரப்பும்அலுவல். அழியாத ஆன்மாக்களை ஈடேற்றும் தெய்வீகஅலுவல். ஆதலால் தேவனின் பிரதிநிதியாய்—பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் மத்தியஸ்தராயிருந்து, நமக்காகத் தமது உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகஞ்செய்து, இரட்சணியபாதையில் நம்மை வழிநடத்தி [illegible] நன்மதிகளாலும், [illegible]

***********************

## குருத்துவ தங்கயூபிலி

யாழ்ப்பாண மேற்றிராசனத்திலே திருத்தொண்டாற்றிவருகின்ற காலங்கண்டஅரியபெரிய குருப்பிரசாதிகளான வண.எல். கிற்றேூ சுவாமிகளும், வண. ஏ. மார்ஜெறிசுவாமிகளும் அடுத்து நிகழும ஆடிமாதம் 7-ந் திகதி சனிவாரமன்று தங்கள் குருத்துவ ஐம்பதாம்வருட தங்கயூபிலியைக் கொண்டாடவிருக்கிறூர்களெனும் சுபசெய்தியை அவர்களிடம் இதுகாலவரை ஆன்ம, சரீரநன்மைகள் அடைந்துள்ள சகலருக்கும் மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

***********************

யானுமானங்களாலும் நமக்கு ஞானப்பலம் அருளுகின்ற — நம்மை மோட்சகரை சேர்க்க ஆவல்கொண்டு அல்லும்பகலும் அயராதுழைத்துவருகின்ற குருவானவரை நேசித்துச்சங்கித்து, அவர்பாலும், அவரை நமக்கருளிய சர்வேசுரன்பாலும் நன்றிபாராட்டுவது நம்மேற் சுமந்த பாரமான கடமையாகும். அங்ஙனம் எமதுநன்றியை வெகுவாகப் பாராட்ட நமக்குக்கிடைக்கும் அரியசந்தர்ப்பங்களில் அவரது குருத்துவயூபிலியும் ஒன்றென்க. தற்போது மிருசுவிற் கட்டளைக்குரவராய் இருந்துவருகின்ற வண. யோசெவ் வேதநாயகம்சுவாமிகள் தமது குருத்துவ இருபத்தைந்தாம் வருட வெண்பொன் யூபிலி விழாவை அடுத்துவரும் 24-ந் திகதி ஞாயிறுவாரம் கொண்டாடவிருக்கின்றூர். இவர் அருமையான பலகுரவர்களை யாழ்ப்பாண மேற்றிராசனத்துக்குத் தந்த அச்சுவேலியைத் தமது ஜனனபதியாகக் கொண்டவர். பரிமேலர் எஸ். அருளானந்தம் அவர்களின் ஒன்றைவிட்ட சகோதரர். ஆங்கிலம், பிரான்சியம், லத்தீன், கிறீக்முதலாம் பாஷைகளை நன்கு பயின்றவர். சிறந்தஎழுத்தாளர். கல்வியில் மிகுந்தகருத்துடையவர். குருப்பட்டம்பெற்றபின் இளவாலை, அனுராசபுரம், கரவெட்டி, நாரைட்டான், கரம்பன், மண்டைதீவு, சுண்டிக்குளிஆதியாம் பல விசாரணைப்பங்குகளிலும் இவர் திருத்தொண்டாற்றித் தாம் சென்றசென்ற விடங்களிலெல்லாம் தமதுஞானமக்களுக்குத் தம்மாலான இகபாரநன்மைகளைச் செய்து அவர்களாலே பெரிதும் சங்கிக்கவும், நேசிக்கவும்பெற்று வந்திருக்கிறூர். குறையெனத் தாம் கண்டதை நிவிர்த்திசெய்வதிலும், தவறெனக்கண்டதைத் திருத்துவதிலும், தகுதியெனக்கண்டதைச் சாதித்துப் பூர்த்திசெய்வதிலும் தயங்காத சுபாவமுடையவரான சுவாமியவர்கள் தாம் அனுப்பப்பெற்றுச் சென்ற விசாரணைப்பங்குகளிலே கோவில்களைத் திருத்திப் புதுப்பித்தும், பாடசாலைகளை நவமாகக்கட்டுவித்தும் மற்றும்அநேக சீர்திருத்தங்களைச் செய்வித்தும் ஆங்காங்கு தமது அழியாத ஞாபகசின்னங்களை நிலைநாட்டி [illegible] ஆதலால் [illegible] குருத்துவவெள்ளியூபிலியைக் கொண்டாடப்போகும் இச்சுபசந்தர்ப்பத்திலே, அவரைச் சர்வேசுரன் கடந்த இருபத்தைந்துவருடங்களிலும் சுகபலத்துடன்காத்து, அவர்மேலும், அவர்மூலயாக நம்மேலும் பொழிந்தருளிய சகல வரப்பிரசாதங்களுக்குமாக அவருடன்சேர்ந்து சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரநமஸ்காரம் சமர்ப்பிப்போமாக! யூபிலிச் சோபனங்கூறிக் களிகூருவோமாக!

## சுதேச வர்த்தமானம்

### மருதமடுத்திருப்பதி

மன்னூர் உபஏசன்றராகிய திரு. ஏ. ஈ. கோகர்லி மொறகொட அவர்கள் மடுப்பதிப் பரிபாலனரான வண. ஜே. புறேகான் சுவாமியவர்களுடன்சேர்ந்து அப்பதியின் ஆடிப்பெரிய மகோற்சவத்திற்கான ஆயத்தங்களையெல்லாம் பூர்த்திசெய்திருக்கின்றூர். முந்தியவருடங்களிற்போன்று இம்முறையும் றெயில்–றோட் இரணடுமிணைந்த பிரயாணசேவை நடந்தேறும். திருப்பதியில் றெயில்வேப்பகுதியார் டிக்கெற் உதவும் கந்தோர் ஒன்றைக்கொண்டிருப்பர். மன்னூரிலிருந்து மடுறோட்வழியாக மருதமடுப்பதிக்கு வழமையான பஸ்களுடன் இம்மாதம் 19-ந்திகதி முதல் விசேஷபஸ்களையும் கம்பெனி ஓடவைக்கவிருக்கின்றது. மகோற்சவத்திற்கு முந்திய சிலதினங்களில் றெயில்வேப்பகுதி ஒரு தொகையான விசேஷ றெயின்களையும் ஓடவைக்கவிருக்கின்றது. மழைபெய்யாத காரணமாகச் சென்றவருடம் தண்ணீர் அருந்தலாயிருந்தபோதிலும் இவ்வருடம் ஏராளமான தண்ணீர் இருக்கின்றது. மடுக்குளம் தண்ணீரால் தேங்கிநிற்கின்றது. திருப்பதியிலுள்ள ஒன்பது கிணறுகளிலும் தண்ணீர் நிறையவிருக்கின்றது. இவற்றின் தண்ணீர் சுத்தஞ்செய்யப்பட்டிருப்பதால் குடிக்கவும், சமைக்கவும் ஏற்றதாயிருக்கின்றது. திருப்பதிச் சுகாதார கருமங்களை மன்னூர்ச் சுகாதார டக்றர் ஒருதொகையான சுகாதார இன்ஸ்பெக்றர்மாரைத் துணைக்கொண்டு கவனித்துவருவார். யாத்திரிகர்களின் நன்மையைக்கோரி விசேஷமருந்துச்சாலை ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது.

### கூட்டுறவு ஆஸ்பத்திரி

தெல்லிப்பழையிலே ஐந்துலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவிருக்கும் கூட்டுறவு ஆஸ்பத்திரிக்குத் திரு. சி. வன்னியசிங்கம், எம். பி. அவர்களாலும், இளைப்பாறிய ஓர் தோட்டத் தலைவரான திரு. எம். இராமுப்பிள்ளை அவர்களாலும் சென்ற வியாழக்கிழமையன்று பெருந்திரளானோர் கூடியசமூகத்திலே அஸ்திபாரக்கல் நாட்டப்படலாயிற்று. இந்தஆஸ்பத்திரிக்கென்று தெல்லிப்பழைக் கிராமச்சங்க மாஜிதலைவரான திரு. எஸ். தம்பு கனகரத்தினம் அவர்கள் அங்கு யாழ்ப்பாணம்–காங்கேசன்துறைவீதியிலே மூன்றுஏக்கர் நிலத்தை நன்கொடையாகக் கூட்டுறவு ஆஸ்பத்திரிச்சபைக்கு உபகரித்திருந்தார். அவரைத்தொடர்ந்து மற்றும் அநேகர் பணநன்கொடை அளித்திருந்தார்கள். சபையின் தலைவரான திரு. ஜே. வி. செல்வநாயகம், கே. சி., எம். பி. அவர்கள் அங்குநிகழ்ந்த கூட்டத்தில் பேசியபோது, "கூட்டுறவுஸ்தாபனங்கள் முற்றுமே கொள்வனவிலும், விற்பனவிலும் மாத்திரம் ஈடுபட்டுக்கொண்டிருக்கப்படாது; அவைகள் மனித முயற்சிகளின் ஏனையதுறைகளிலும் பயன்படுத்தப்படவேண்டும்; கூட்டுறவு ஆஸ்பத்திரிவிஷயமாக மூளாய் ஏலவே தானே ஓர் முன்மாதிரி காண்பித்துள்ளது" எனக்கூறிநின்றூர். புதியஆஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "மருதமடுயாத்திரைக் கைத்துணை"

மேற்காட்டிய நாமந் தாங்கியதும், கண்ணைக்கவரும் அழகுவாய்ந்ததுமாய் நவமாக அச்சிடப்பெற்ற புத்தகம் ஒன்று வரப்பெற்றோம். மருதமடுச் செபமாலைநாயகியின் அலங்காரமான படத்தை முகனையிற்கொண்ட இது, மருதமடுத்திருப்பதி யாத்திரிகர்களுக்கெல்லாம் ஓர் பொக்ஷம்போன்றது. இதிலே அத்திருப்பதிக்கு யாத்திரை செய்யும்விதம்; யாத்திரை புறப்படுமுன்னும், யாத்திரைசெய்து அப்பதியை அடைந்தபின்னும் செய்யத்தகும் செபங்கள், செபமாலைத்தியானம், மருதமடுச் செபமாலைமாதாவின் பிரார்த்தனை, மருதமடுச் செபமாலைத்தாயாரின் சந்திப்பு, மடுமாதாபேரில் பிரார்த்தனம், மாதாவுக்கு காணிக்கைச்செபங்கள் ஆதியபலவும் சிறப்பாக அடங்கியிருக்கின்றன. மருதமடுத் திருப்பதிக்கு யாத்திரை செய்கிறவர்கள் தங்கள் யாத்திரையை இனிதே முடிப்பதற்கு இஃதோர் வழிகாட்டி போன்றது. இதில் அடங்கியிருப்பனவெல்லாம் மடுமாதாவில் பக்திப்பாவசம் உண்டுபண்ணுவனவும், உள்ளத்தைப் பெரிதும் உருக்கி நம்பிக்கையைப் பிறப்பிப்பனவுமாகும். அதனால் "மருதமடு யாத்திரைக் கைத்துணை" என்று இதற்குக் கொடுபட்டிருக்கும் நாமம் சாலவும் பொருத்தமானதே. மருதமடு யாத்திரிகர்கள் இதனை ஓர் கைத்துணையாகக் கொள்ளுமிடத்து அடையக்கூடிய நன்மைகள் அனந்தமாகும். பிரதி விலை சதம் 50. வியாபாரிகளுக்குப் நூற்றுக்குப் பத்துவீதமானகழிவுகொடுக்கப்படும். கிடைக்குமிடம் மடுக்கோவில், மாதாவின் பண்டகசாலை, பி. ஓ.

**OUR LADY'S DEPOT**
**Madhu Church, P. O.**

---

பத்திரி இப்போதைக்கு நான்குநான்கு அறைகளைக்கொண்ட பன்னிரு குடிசைகளையும், இருபகிரங்க வாட்டுகளையும், நிர்வாககட்டிடத்தையும், டக்றர்மார் நேர்ஸ்மார் முதலானோரின் வீடுகளையும் கொண்டதாயிருக்கும்.

### மாட்டுரோகம்

நவாலியிலும், ஆனைக்கோட்டையிலும் "பிளாய்க் குவாட்டர்" என்ற மாட்டுரோகம் நடப்பதாக அறிவிக்கப்படுகிறது. அதனால் இந்தரோகம் பரவாது தடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. அவ்விரு கிராமங்களிலிருந்து மாடுகளும், மாட்டுவண்டிகளும் பிறவிடங்களுக்குச் செல்வதுதடுத்துவிடப்பட்டிருக்கிறது. அநுராசபுரப் பிரிவிலும் கொட்டவெல—துலாணு, நம்பதே—துலாணுஎனும் பகுதிகளில் மாடுகளுக்குக் கால்நோய்—வாய்நோய் உண்டாயிருக்கிறது.

### காரீயவியாபாரம்

இலங்கைக் காரீயத்துக்குத் தற்போது உலகமுழுவதுமே அதிகதேவை ஏற்பட்டிருந்தபோதிலும், ஒருதொகையான சிறிய காரீயச்சுரங்கங்களை மூடிவிட்டமையாலே தேவையான காரீயத்தைப் பிறநாடுகளுக்கு அனுப்பிக்கொள்ள முடியாதிருக்கிறது. இலங்கைக் காரீயஏற்றுமதி 1942-ம் ஆண்டிலே 28,000 தொன்னுக விருந்து சென்ற 1950-ம் ஆண்டிலே 12,000 தொன்னுகக் குறைந்துபோயிருக்கிறது. மடகஸ்கார், கோறியா, மெக்சிக்கோ, பவேரியா, ஆஸ்திரியா, இத்தாலி, போர்த்துக்கேய மேற்காபிரிக்கா முதலாம்நாடுகளிலிருந்து காரீயஏற்றுமதியில் பலத்தபோட்டி ஏற்பட்டபோதிலும் இலங்கைக்காரீயமே இன்னமும் உலகிற் சிறந்ததாய்க் கொள்ளப்படுகிறது.

## "அர்ச். யூதா ததேயு"

கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரெனப் பேர்விளங்கும் அர்ச். யூதா ததேயுவின் சீவியத்தினதும், சுவிசேஷதொண்டினதும் சுருக்கமானவரலாறும், அவரைக்குறித்துச் செய்யத்தகும் பக்தியனுசாரங்களும், செபங்களும்அடங்கியுள்ள அழகான சிறிய புத்தகம்ஒன்று தரப்பெற்றோம். இஃது அகிலஇலங்கைக் கத்தோலிக்க ஐக்கிய சங்கத்தின் இலக்கியப்பகுதிச் செயலாளரான திரு. ஐ. வி. பேர்டினண்டஸ்அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டது. பரிமேலர் எஸ். அருளானந்தம், கே. எஸ். ஜி. அவர்களால் தமிழில்இசைத்தெழுதப்பெற்றது. இதிலே வர்ணிக்கப்படுகின்ற அர்ச். யூதா ததேயுஎன்பவர் யார்? பன்னிரு அப்போஸ்தலர்களில் ஒருவர். எமதுஆண்டவரின் ஒன்றைவிட்ட சகோதரர் அர்ச் சூசையப்பரின் சொந்தச்சகோதரரான கிளேயோப்பாஸின் புதல்வர். இவர்தாயார் தேவமாதாவுக்குமிகநெருங்கிய சுற்றத்தவர். அப்போஸ்தலரான அர்ச். சின்னயாகப்பரினதும், அர்ச். சிமியோனதும் சகோதரர். வேதசாட்சியாகமரித்தவர். இத்தகைய பெருமைவாய்ந்த ஒரு புனிதசீலர் சருவேசுரனிடம் எத்துணைபெரும் செல்வாக்குடையராய் இருப்பாரென்று எடுத்துக்கூற வேண்டியதில்லை. அதனால் கைவிடப்பட்டவர்களின்பாதுகாவலர்; இனிமேல் ஆற்றுதென்றவகையிலே, துன்பகஸ்திப்படும் வேளைகளில் தப்பாது ஆறுதல்தர அனுக்கிரகம் பெற்றவர். இந்த அருமையான புத்தகத்தைப் படித்தவர்கள் அவர் அடைந்துள்ள விசேஷவரத்தையும், அவர் செய்துள்ள ஆரியசகாயங்களையும் கண்டறிந்து தாங்கள் ஆதாவற்றுத் தயங்கும் வேளைகளில் அவர் சலிகையைப் பெரிதும்ஆர்வத்துடன் தேடுவார்களென்பதுநிச்சயம். அதற்கு உதவியாய் அவரைக்குறித்துச் செய்யத்தகும் நவநாட் செபமும், நவதினப் பத்தி அனுசாரச்செபமும், பிறசெபங்களும், அவர் பிரார்த்தனையும் இதிலே தரப்பட்டிருக்கின்றன. நமக்குஉதவிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

---

### வித்தியாசேலவு

களனியிலுள்ள ஸ்ரீ கல்யாணிக் கிராமாபிவிர்த்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம்ஒன்று சென்ற வியாழக்கிழமை நடந்தபோது, அதற்குத் தலைமைவகித்த நிதிமந்திரியார் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் பேசுகையில், அடுத்துவரப்போகும் புதியஅரசிறை வருடத்தின் வரவுசெலவுத் திட்டமானது, கல்விவிருத்திக்கென்றுமாத்திரம் 15 கோடி ரூபா, அதாவது யுத்தத்துக்குமுந்திய வருடங்களிலே அரசாங்கம் வருடம்ஒன்றுக்குச் செலவிட்டமொத்தச்செலவுத்தொகைக்குச் சரியானபணம் உதவவிருக்கிறது"எனக் கூறியிருக்கின்றார்.

### தற்காலிக கிளாக்குமார்

1950-ம்ஆண்டு பங்குனிமாசத்தின்முன் அரசாங்க உத்தியோகசேவையில் சேர்ந்துகொண்ட தற்காலிக கிளாக்குமாரையெல்லாம் நிரந்தர சேவையில் சேர்த்துக்கொள்வதற்கான திட்டம் ஒன்றைச்செய்ய அரசினர்முன்வந்திருக்கின்றனர். இந்தக் கிளாக்குமாரைப்பற்றிய விபரமெல்லாம் ஏலவே சேகரிக்கப்பட்டுவிட்டன. கூடியவிரைவிலே இவ்வேலையைப் பூர்த்திசெய்யும்படியாக நிரந்தரகாரியதரிசிகளினதும், கந்தோர்ப்பகுதிகளின் தலைவர்களினதும் உதவியைத் திறைசேரி கேட்டிருக்கின்றது.

---

## .பெரிய குறிப்பிடம்

விற்பனைக்குத் தயாராயிருக்கிறது

பிரதி விலை சதம் 30.

## யப்பானிய சமாதான உடன்படிக்கை

ஜேர்மனியையும், யப்பானையும் பலப்படுத்த அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைபோட ரூஷியா அரசியல்சதுரங்கப் போட்டியில் மிகவும் தந்திரமாக நடந்துவருகிறது. ஜேர்மனியை ஆயுதபாணியாக்க அமெரிக்கா முயற்சியெடுத்த சமயத்திலே நான்கு வல்லரசுகளின் வெளிநாட்டுமந்திரிகள் மகாநாடு ஒன்றைக் கூட்டவேண்டுமென்று ரூஷியா திடீரென ஒருயோசனைவெளியிட்டது. ஆனால், அம்மகாநாட்டுக்கு விஷய அட்டவணை தயாரிப்பதற்குக் கூடிய உதவிவெளிநாட்டு மந்திரிகளின் மகாநாட்டில் சமரசமானமுடிவு ஏற்படுவதற்கு ரூஷியா முட்டுக்கட்டைபோட்டுவருவதைப்பார்த்தால், ஜேர்மனி ஆயுதபாணியாக்கப்படுவதில் காலதாமதத்தை உண்டுபண்ணும் நோக்கத்துடனேயே அது நான்கு வல்லரசுகளின் மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்ற யோசனையை வெளியிட்டுள்ளதென்பது இப்பொழுது நன்கு புலனுகிறது.

அதேபோன்று இப்பொழுதும் அமெரிக்கா யப்பானைச் சுதந்திரநாடாக்கி அதைப்பலப்படுத்தும் நோக்கத்துடன் யப்பானிய சமாதானஉடன்படிக்கையைத் துரிதமாக ஏற்படுத்த நடவடிக்கைஎடுத்துவரும் இச்சந்தர்ப்பத்தில், யப்பானிய சமாதானஉடன்படிக்கையைச் செய்யுமாறு யப்பான்மீது யுத்தம்தொடுத்திருந்த நாடுகள் அனைத்தும் அடங்கிய ஓர் மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்று ரூஷியா யோசனைவெளியிட்டிருக்கிறது. யப்பானிய சமாதானஉடன்படிக்கை சம்பந்தமாக அந்நாடுகளிடையே இருந்துவரும் அபிப்பிராயபேதங்களைப் பயன்படுத்தி யப்பானிய உடன்படிக்கையை ஏற்படுத்துவதில் அமெரிக்கா வெற்றிபெறுதிருக்கும்படி செய்யவே ரூஷியா தந்திரமாக இந்தயோசனையைக் கூறியிருக்கிறது.

யப்பானிய சமாதானஉடன்படிக்கையைச் செய்வதுசம்பந்தமாக யப்பானுக்கும், ஆஸ்திறேலியா, நியூசிலாந்து ஆகியநாடுகளுக்கும் விஜயம் செய்த ட்றூமனின் விசேஷதூதர் திரு. டல்லஸ்அவர்கள் அமெரிக்காதிரும்பியதும் அமெரிக்க வெளிநாட்டுஅரசாங்கபகுதியே யப்பானிய சமாதான உடன்படிக்கையொன்றைத் தயாரித்துள்ளது. இதற்குப் போட்டியாக ரூஷியாவும், சீனுவும்சேர்ந்து தாங்களே யப்பானிய சமாதானஉடன்படிக்கை தயாரிப்பதென முடிவுசெய்தன. அமெரிக்கா தயாரித்தஉடன்படிக்கைக்குப் பிரித்தானியின்சம்மதத்தையும், பிரான்சின் சம்மதத்தையும்பெறத் திரு. டல்லஸ் அந்நாடுகளுக்கு விஜயம்செய்துள்ளார். அந்தநகல் உடன்படிக்கையைப் பிரித்தானிய மந்திரிசபை அங்கீகரித்துவிட்டது என்றசெய்தி வெளிவந்தபோதிலும் கம்யூனிஸ்தசீனு சம்பந்தமாக அமெரிக்காவுக்கும் பிரித்தானிக்குமிடையே அபிப்பிராயபேதம் இருந்துவருவதால் யப்பானியசமாதானஉடன்படிக்கை துரிதமாக நிறைவேற்றிவைக்கப்படுமென்று எதிர்பார்ப்பதற்கில்லை. பிரித்தானி கம்யூனிஸ்தசீனுவை அங்கீகரித்துள்ளது. அமெரிக்காவோ தேசீயசீனுவை ஆதரிக்கிறது. ஆகவே, யப்பானிய சமாதான உடன்படிக்கையில் எந்தச்சீனு கையெழுத்திடுவது என்பதுபற்றி இருநாடுகளுக்கும் வித்தியாசமானகருத்துக்கள் இருக்கின்றன. முதலாவது யப்பானுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்; பின்னர் யப்பான் தனதுஇஷ்டம்போலக் கம்யூனிஸ்தசீனுவுடனே அல்லது தேசீயசீனுருடனே சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளும்படி விட்டுவிடவேண்டுமென்ற ஏற்பாட்டுக்கு அமெரிக்காவும், பிரித்தானியும் இணங்குமாகில் சமாதான உடன்படிக்கை ஒருவேளை துரிதமாக நிறைவேறுமென எதிர்பார்க்கலாம்.

புத்தக மதிப்புரை

## "இன்பத்திலும் * * துன்பத்திலும்"

ஆசிரியர்: பாஸ்கல் தியோதர் — தமிழ் இலக்கியக்கழகம், தூத்துக்குடி. —விலை ரூபா 1/8. பக்கம் 210

இன்பத்திலும் துன்பத்திலும் மாறுதகாதலும், நீங்காதகடவுளன்பும் மேற்கொண்டொழுகிய தலைமக்கள் இருவரது இல்வாழ்க்கை வரலாற்றைத் தலைமைப்பொருளாக வைத்து, அவரோடுதொடர்புடைய ஏனையோர்பால் விளங்கும் பலநிறப்பண்புகள் ஆங்காங்கே பரந்துமிளிருமாறு எழுதிக்காட்டப்பெற்ற எழில்மிகும் ஓவியம் இப்புதுக்கதை என்க. தீராதநோயினுல் ஐந்துஆண்டுகள் தொடர்ச்சியாய்ப் பாயும்படுக்கையுமாகக் கிடக்கும் தன் அருமைக்காதலிபால் கணவன் காட்டும் அன்பும், பரிவும், உருக்கமும், துணையும், வீரமும், தனக்கெனவாழாத் தகைபெறுஞ்சால்பும் கல்நெஞ்சையும் கரைக்கவல்லனவாகும். தன்மாட்டுப் போன்புபூண்டு இரவும்பகலும், எப்பொழுதும், ஊண்உறக்கம், ஒய்வுஇன்பம் அனைத்தையும்மறந்து, தன்னையே உயிராகக்கொண்டொழுகும் தன்காதலன்கண் மனைவிவைத்திருக்கும் நன்மதிப்பும், ஆர்வமும், நன்றியுணர்ச்சியும், கிடைத்தற்கரிய நலன்களைத் தானும் தன்அருமைக்கணவனது இம்மைவாழ்வுப் பேற்றிற்காகத் துறந்துள்ள பெருந்துறவும், பிறவும் கேட்டார்ப்பிணிக்குந் தகையனவும், கேளாரும் வேட்பனவுமாய வியத்தகு பண்புகளாய் அமைந்துள்ளன. ஆடவரும் மகளிரும் தமக்கு வாழ்க்கைத்துணைவரைத் தெரிந்துகொள்ள நேருமிடத்து நோக்குதற்குரிய குற்றமற்ற பழக்கவழக்கங்களும், குறிக்கோள்களும், பெற்றூர் பிள்ளைகளை வளர்க்கவேண்டிய முறைமையும், அன்னூர்க்கு அளிக்கவேண்டியஉரிமையும், பள்ளி ஆசிரியர், திருமறைக்குரவர் முதலியோர்கடமையும், இன்னோரன்ன பிற அரியநலன்களும் உரிய இடங்களில் பெய்துரைக்கப்படுகின்றன. கத்தோலிக்க திருமறையோர் அனைவரும் கடைப்பிடித் தொழுக வேண்டிய உயர்ந்தகருத்துக்களும், குணநலச்செயல்களும் குறிப்பாகவும் சிறப்பாகவும் கூறப்பெற்றிருத்தலின், தமிழ்க் கத்தோலிக்க நன்மக்கள் இத்தமிழ்க் கதையைப் படித்தலால், இம்மைமறுமைப் பெரும்பயன் எய்துவரென்பது திண்ணம். பிறசமயத்தோரும் பயனுடன்பயிலற்குரிய சிறப்பு மிக்குள்ளது. எவரும் படித்துணர்தற்கேற்ற எளிய இனிய அழகியநடையில், தெளிவும் திருத்தமும அமைந்த அச்சில், இருநூற்றிற்குமேலான பக்கமுடையதாகிய இப்புத்தகம் மிகவும் குறைந்த விலைக்கு வெளியிடப்பெற்றுள்ளது. நமக்கனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

## தேவ வள்ளன்மை

( 1-ம் பக்கத் தொடர்ச்சி )

இருதிறத்தார் உள்ளத்திலும் இந்தவள்ளன்மை என்றபண்பு மிகுந்திருந்ததை அறிகிறோம். மானிட உள்ளங்களைச் சிறக்கச்செய்த இந்தவள்ளன்மை இஃதென்றால், இனி, தேவனின் திருஉள்ளத்தே மாட்சிமையுடன் துலங்கும் தேவவள்ளன்மையை என்னென்போம்! தெய்வீக வள்ளலாம் திவ்வியயேசுவின் திருஇருதய வள்ளன்மையை நன்குஅறிந்து அத்தேவ திருவள்ளலை அண்டி அபயம்பெறும் வகையைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## அமெரிக்காவின் தீர்மானங்கள்

நியூயோக்

அமெரிக்கா கடைப்பிடித்துவரும் தூரகிழக்குக் கொள்கைகுறித்து அமெரிக்கசெனற்சபைக் கூட்டுக் கம்மிற்றிகள் நடத்தும் விசாரணைபற்றி 'நியூயோக்ரைம்ஸ்' பத்திரிகை தீட்டியுள்ள தலையங்கமாவது: இந்நாடு கடைப்பிடித்த, கடைப்பிடிக்கிற தூரகிழக்குக் கொள்கைபற்றி இராசாங்க மந்திரி அச்சிஸன் அவர்கள் ஆச்சரியப்படத் தக்கவகையில் விரிவான விளக்கம் தந்துள்ளார். அதிலிருந்து ஒருவிஷயம் தெளிவாகியுள்ளது. அமெரிக்கா தனது தூரகிழக்குக் கொள்கைகுறித்துச் "சும்மாவிருப்பதாக"ச் சொல்வதற்கில்லையென்பதை அது காட்டுகிறது. அமெரிக்கா திடமானகொள்கையைச் செயற்படுத்திவருகிறது. இப்போதைய விசாரணைகளிலிருந்து கீழ்க்காணும் தீர்மானங்கள் புலனாகின்றன:

(1) கோறியாப்போரைக் கோறியாவுக்குள் சுருக்குவதே அமெரிக்காவின் லட்சியம். அதற்காக அது முன்பின் யோசித்துக் காரியம்செய்கிறது. வீண் ஆபத்தைத் தவிர்க்க விரும்புகிறது. அதேசமயத்தில் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்புக்குக் கோறியாவைப் பலியிட்டுவிடாது.

(2) பேச்சுவார்த்தைகள் மூலம் போர்நிறுத்தங்காண எப்போதும்நாம் 'கதவை'த் திறந்துவைத்திருப்போம்.

(3) ஆனால், ஆக்கிரமிப்புக்கு இணங்கிப்போவதுஎன்பதை நாம்ஒருக்காலும் ஒப்பப்போவதில்லை. எனவே, போர்மோஸாவைச் சீனக்கம்யூனிஸ்தர்களுக்குக் கொடுப்பதை நாம்ஆட்சேபிப்போம். அதைப் பலாத்காரமாகப் பறித்துக்கொள்வதையும் ஆட்சேபிப்போம். அதுபோல ஐ. நா. ஸ்தாபனத்திலே சீனக்கம்யூனிஸ்தர்களுக்கு இடமளிப்பதையும் ஆட்சேபிப்போம்.

(4) சுதந்திர, சனநாயக, ஐக்கிய கோறியாவைத் தோற்றுவிக்குமாறு அரசியல்வழிகளில் நாம்தொடர்ந்து பாடுபடுவோம்.

(5) நமதுசகாக்களுடன் இயன்றளவு ஒன்றுபட்டு வேலைசெய்துவருவோம். ஐ. நா. கட்டுத்திட்டங்களை மீறமாட்டோம்.

(6) சீனத் தேசியஅரசாங்கத்துக்கு நாம்தொடர்ந்து ஆங்கீகாரம் அளித்துவருவோம். சீனக்கம்யூனிஸ்தர்களுக்கு அங்கீகாரம்மறுப்போம்.

(7) கம்யூனிஸ்த ஏகாதிபத்தியம் பரம்புவதை எதிர்த்துவருவோம். கம்யூனிஸத்தை எதிர்த்துநிற்போருக்குத் தொடர்ந்துஉதவிபுரிவோம்.

(8) யப்பானிய சமாதான உடன்படிக்கையைத் தாராளமனத்துடன் விரைவில் பூர்த்திசெய்யத் தொடர்ந்து தீவிரமாகப் பாடுபடுவோம்.

### கைவிடக்கூடாது

வாஷிங்ரன்

ஏனையசுதந்திரஉலகுக்கான பொறுப்புகளை நிறைவேற்றுமஆற்றலை மட்டுப்படுத்தக்கூடிய யாதோமோர் இராணுவ நடவடிக்கையும் கோறியாவிலே அமெரிக்கா மேற்கொள்ளப்படாது என்று அமெரிக்க உபதளபதி அல்பேட் ஜி. வீடிமெயர் வற்புறுத்துகிறார். அமெரிக்க தூரகிழக்குக் கொள்கை குறித்து நடந்துவருகின்ற செனற் கூட்டுக்கம்மிற்றிகளின் விசாரணையின் போது, இரண்டாவது உலகமகாயுத்தத்திலே சீனாவில் அமெரிக்கசேனாபதியாக விளங்கிய இவர் மேலும் தெரிவித்ததாவது: "நமதுவருங்கால பந்தோபஸ்துக்கோ அல்லதுநலனுக்கோ நான் கோறியாவை ஒரு கேந்திர பீடமாகக் கருதவில்லை. ஐரோப்பாவிலும், ஏனைய இடங்களிலும் நாம் ஏற்கவேண்டிய பொறுப்புக்கள் இருக்கின்றன. எனவே, முக்கியத்துவம் இல்லாத இந்தக் கோறியாவுக்காகத் தொடர்ந்துநாம் சக்தியைச்செலவிட்டு வருவதுஎன்பது, இன்னும்முக்கியமான காரியத்தில் ஈடுபடுவதற்குரிய நமதுவல்லமையைப் பாதிக்குமென்பதே எனதுஅபிப்பிராயம்."

### குழப்படிக்குக்காரணம்

நியூயோக்

இன்றைய உலகக் குழப்படிக்குச் சோவியற்மேலிடத்தாரே ("பொலிட்புறோ" அங்கத்தவர்) காரணஸ்தர்கள் என்பதாகவும், எல்லாநாடுகளிலும் ஏற்பட்டுவருவனபோன்ற மாறுதல்கள் சோவியற்நாட்டிலும் தோன்றி அத்துடன் சுதந்திரஉலகம் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்வதற்கான நிலைமை ஏற்படுமென நம்புவதாகவும் இங்கு ஆஸ்திறேலிய-அமெரிக்க சங்கத்தில் பேசிய ஆஸ்திறேலியஸ்தானிகர் பெர்ஸி ஸி. ஸ்பெண்டர் குறிப்பிட்டார். ஆக்கிரமிப்புக்கு ஒருநாளும் இடங்கொடுக்கக் கூடாதென்றும், அதேசமயம் சர்வதேசத் தகராறுகளைக் கிளப்பும்காரியத்தைத் தவிர்க்க வேண்டுமென்றும், பகைவராகத் தோன்றுவாரோடும் கண்ணியமான சமாதானத்திற்குவர வழியிருக்கிறதா எனப் பார்க்கவேண்டுமென்றும், வளப்படாதநாடுகளுக்கு மறுநாடுகள் கைகொடுக்கவேண்டுமென்றும் அவர் வற்புறுத்தினர்.

### பொருளாதார நிருபம்

வாஷிங்ரன்

சராசரி அமெரிக்ககுடும்பங்கள் உயரிய வாழ்க்கைத்தரம் பெற்றுள்ளவைகள். இந்தஉண்மையை ஐ. நா. புள்ளிவிபரப்பகுதி அத்தாட்சியுடன் எடுத்துக்காட்டியிருக்கிறது. சோவியற்நாட்டில் ஒருஆளின் சராசரி வருடவருமானம் 308 டலர். அமெரிக்காவில் ஒருஆளின் சராசரி வருடவருமானம் 1,453 டலர். பிரித்தானியில் 773 டலர். (ஒரு டலர் 4 ரூபா 77 சதம்.) இத்தகவலுடன் அமெரிக்க இராசாங்க உதவிமந்திரி எட்வாட் டபிள்யூ. பாறெட் அவர்கள் "அமெரிக்கா" என்ற சஞ்சிகையில் எழுதுமிடத்து, இதைப்படித்து மற்ற நாட்டவர்களின் வாழ்க்கைநிலையுடன் தங்கள்நிலையை ருஷியமக்கள் ஒத்துப்பார்ப்பதைச் சோவியற் அதிகாரவர்க்கம் விரும்பவில்லை. எனினும், மக்கள் இதைப்படிக்கிறார்கள். இல்லாவிடின் அமெரிக்க வாழ்க்கைத்தரத்தைப் பற்றிப் புழுகுப் புள்ளிவிபரங்களை மஸ்கோகோஷ்டி சோடிப்பானேன்? சுமார் 70 லட்சம் அமெரிக்ககுடும்பங்கள் வருடம்ஒன்றுக்கு 2,000 முதல் 3,000 டலர் சராசரிவருமானம் பெறுகின்றன. சுமார் 1 கோடியே 30 லட்சம்குடும்பங்களின் சராசரிவருமானம் வருடம்ஒன்றுக்கு 3,000 டலர் முதல் 5,000 டலர் வரையிருக்கிறது. சுமார் 69 லட்சம் குடும்பங்கள் வருடத்தில் 5,000 முதல் 10,000 டலர் சம்பாதிக்கின்றன. 11 லட்சம் குடும்பங்கள் மட்டும் வருடத்தில் 10,000 டலரும் அதற்குமேற்படவும் சம்பாதிக்கின்றன.

### கண்ணியமான உறவு

வாஷிங்ரன்

"இறுதியிலே ஏமாற்றத்தை நிச்சயம்தரக்கூடிய பாதையில் சீனமக்களைப் பீப்பிங் கம்யூனிஸ்தஅரசாங்கம் அழைத்துச்செல்லுகிறது. அதற்கு மாறாகச் சுதந்திரஉலகுடன்கொள்ளும் கண்ணியமானஉறவு சீனாவுக்கு மகத்தானமுன்னேற்றத்தைத் தருவது உறுதி"— இவ்வாறு, தூரகிழக்குக் கொள்கைகுறித்து [illegible] அமெரிக்ககாங்[illegible]

விசாரணையின்போது, இராசாங்க மந்திரி அச்சிஸன் அபிப்பிராயம் தெரிவித்தார். கைத்தொழில் முன்னேற்றம் அடையவேண்டுமென்றஎண்ணம் சீனாவுக்கு உண்மையாகவே இருக்குமாகில், அது ருஷியாவுடன் உறவாடுவதனால் ஏற்படாது; சுதந்திரஉலகுடன் உறவு கொண்டாலே தொழிலியல் முன்னேற்றம் சாத்தியமாகும்என்று செனற்றர் [illegible] மறுமொழி தரு[illegible] குறிப்பிட்டார்.

## எபேசுஸ் நகரம்

திருச்சபைச்சரித்திரத்தில் முக்கியத்துவம்வாய்ந்த நகரங்களுள் எபேசுஸ் நகரமும் ஒன்று. அர்ச். சின்னப்பர் எபேசியர்களுக்குஎழுதிய நிருபமொன்றும் சுவிசேஷத்தில் அடங்கியுள்ளது. இது சின்ன ஆசியாவில் (ஆசியமைனர்) உள்ளது. றோமைச்சாம்ராச்சியம் பரவுவதற்குமுன்பே எபேசுஸ் ஒரு பிரபல கிரேக்கநகரா யிருந்துவந்தது. அங்கிருந்த டையனு தேவதையின் ஆலயம், அக்காலத்திலே உலகில் மிக ஆச்சரியத்திற்குரிய ஏழுகாரியங்களுள் ஒன்றாகக்கருதப்பட்டுவந்தது. அர்ச். சின்னப்பர் எபேசுஸ்நகரத்தைத் தரிசித்து, அங்குவெகுபேர்களை மனந்திருப்பி ஒரு கிறீஸ்துவசமுகத்தை ஸ்தாபித்தார். 431-ம் ஆண்டில் இங்குகூடிய மேற்றிராணிமார்கள் மகாநாட்டில் (திருச்சபையின் 3-வது மகாநாடு) நெஸ்தோரியுஸ்என்பவரின் தப்பறையானகொள்கைகள் கண்டனம் பண்ணப்பட்டன. இந்தப்பழையநகரம் நாளாவட்டத்தில் பாழடைந்துவிட்டது. தற்போது துருக்கிஅரசாங்கம் அங்கு வண்டிகள்செல்லத்தக்க வீதிகள்அமைக்கத் திட்டம்பண்ணியுள்ளது. எபேசுஸ்நகரில்உள்ள இடிகரைக் கட்டடங்களுள் அதிமுக்கியமானவை, அந்த மகாநாடு நடைபெற்ற ஆலயம், அர்ச். அருளப்பர் பசிலிக்காஆலயம், தேவமாதா அந்தியகாலத்தில் வசித்துவந்ததாகக் கருதப்படும்வீடு முதலியன. இந்தவீட்டைப்பற்றி இன்றையவரையில் அபிப்பிராயபேதம் இருந்துவருகிறது. ஒருசாரார் தேவமாதா தமது அந்தியகாலத்தில் எபேசுஸ்நகரில் வசித்துவந்ததாகவும், அங்குதான் மரித்ததாகவும் கருதுகின்றனர். மற்றொருசாரார் தேவமாதா ஜெருசலேமில் மரித்ததாகக் கருதுகின்றனர். எபேசுஸ்நகர் இருந்த தலத்திற்கு வீதிகள்திறக்கப்பட்டவுடன் புராதனப்பொருள் ஆராய்ச்சி நிபுணர்கள் அங்குசென்று ஆராய்ச்சிகள்நடத்தி இந்தப்பிரச்சினைக்கு முடிவு காணக்கூடும்என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

—மிலான், பிறசெல்ஸ், அம்ஸ்டர்டாம், லண்டன்முதலாம் நகர்களிலுள்ள மிருககாட்சிச்சாலைகளுக்கென்று சிலதினங்களின்முன் உலாந்த ஆகாயவிமானம்ஒன்றில் அனுப்பிவைக்கட்ட குரங்குகள், பட்சிகளில் 78 குரங்குகளும், 153 பட்சிகளும், வழியிலே மூச்சடைத்து இறந்துபோயிருக்கக் காணப்பட்டன.

—பிரான்சிய பொதுத்தேர்தல் இம்மாசம் 17-ந்திகதி நடைபெறவிருந்த காரணமாகச் சென்னுக்கொலுவின் கன்னிகாசபையை உடனின்று அடியிட்டவளான ஆசா. மரியேதெரேஸ் குடேர்க் அம்மாளுக்கு முத்திப்பேறுபட்டஞ் சூட்டுவது பின்போடப்பட்டிருக்கிறது. அன்றுதினமே இவள் அத்திருப்பட்டம் சூட்டப்படவிருந்தாள்.

—பத்திரிகாசிரியர்கள், அச்சிடுகிறவர்கள், பத்திரிகைகளை விற்பவர்கள் ஆதியோரின் ஆன்மநலன் கருதி றோமைநகரின் மத்தியிலுள்ள கோவில் ஒன்றிலே ஒவ்வோர்சனிவாரமும் நடுச்சாமப்பூசை நிறைவேற்றுதற்குப் பரிசுத்தபிதா அனுமதித்திருக்கின்றார்.

## புத்தக மதிப்புரை

### "நவ இலங்கை"

*நூலாசிரியர்: எச். ஏ. ஜே. ஹுலுகல்லே—குல. சபாநாதன். இலங்கைப் பிரசுர கட்டுப்பாட்டுப் பகுதியினரால் வெளியிடப்பட்டது. அரசினர் அச்சியந்திரசாலையிற் பதிப்பிக்கப்பெற்றது. 88 பக்கங்கள் கொண்டது. பிரதி விலை சதம் 50.*

இந்நூல் 88 பக்கங்கள் கொண்டதாயினும் இதில்அடங்கியுள்ள பல அருமையானவிஷயங்களும், உளத்தைக்கவரும் பிரதிமைப் படங்களும் அவற்றைப்போல் பன்மடங்கு பக்கங்கள்கொண்ட ஓர் நூலில் படித்தும், பார்த்தும் அறியக்கூடியனவற்றைப் போல் அத்துணைபெரும் காத்திரமானவையாகும். ஒவ்வோர்விஷயமும் விரிவாகவும், தெளிவாகவும தக்க ஆராய்ச்சியுடன் எழுதப்பட்டிருக்கின்றன. 'இலங்கை'எனும்நாமம் எங்ஙனம்பிறந்தது? என்ற ஆராய்ச்சியிற் தொடங்கி, அஃது எப்போது எவ்வாறு சுதந்திரம்பெற்று 'நவஇலங்கை' ஆயிற்று என்றவரையுள்ள விஷயங்களெல்லாம் வேண்டியவிளக்கத்துடன் எழுதப்பட்டுள்ளன. மற்றோர்விதமாகக் கூறுமிடத்து, இலங்கையின் ஆதிக்குடியேற்றந்தொடக்கம் தற்போது நடைபெறும் 'சோல்பரித்திட்டஆட்சி' யீறாகவுள்ளகாலத்திலே இங்குநிகழ்ந்த ஆட்சிமுறைகள், பிறநாட்டினரின் படையெடுப்புகள், அவற்றால் இலங்கை அடைந்த நன்மைதீமைகள், கல்வி, சமயம், சிற்பம், வியாபாரம், போக்குவரவுச்சாதனங்கள், கைத்தொழில், கமத்தொழில், கடற்றொழில், சமூக இயக்கங்கள் என்பனவற்றிலே காலத்துக்குக்காலம் ஏற்பட்ட மாற்றங்கள், முன்னேற்றங்கள், இலங்கை எவ்விதம் சுதந்திரத்துக்குத் தயாரானது, எப்படிக் கத்தியின்றி, இரத்தமின்றிச் சுதந்திரத்தைஈட்டிக்கொண்டது, தற்போதுள்ள யூ. என். பி. முதலிய அரசியற்கட்சிகளின் குணகுணங்கள், ஈழநாட்டின் பிரதான சமயஸ்தலங்கள்பற்றிய விளக்கங்கள் ஆதியனவெல்லாம் பதினைந்து பிரதானபாடங்களிலேஆசிரியரவர்கள் செவ்விதே அமைத்திருப்பது பாராட்டத்தகுந்த ஓர்அருஞ்செயலாகும். மேலும் இந்நூலின்கண் இலங்கையின் இயற்கைக் காட்சிகள், பௌத்தஆலயங்கள், கண்டெடுக்கப்பட்ட புதைபொருட்களான சிலைகள், விக்கிரகங்கள் முதலியவற்றின் பிரதிமைப்படங்களோடு, கண்டிச் சிங்கள நடனம், றப்பர்பால்வெட்டுதல், நாற்று நடுதல், பனையோலையாற் பெட்டி யிழைத்தல் ஆதியவற்றைக் காண்பிக்கும் பிரதிமைப்படங்களும், இலங்கை, இந்திய பிரதமர்களின் படங்களும் சிறப்பாகஅமைந்திருக்கின்றன. இந்நூல் கலாசாலைமாணவர், ஆசிரியர் முதலானோர்க்கும், இலங்கையைப் பற்றி அறியவிரும்பும் பிறநாட்டினர்க்கும் பெரிதும் பயன்படுவதாகுமென்பதே நமதுதுணிபாகும். எமக்கனுப்பிய பிரதிக்காக நன்றிகூறுகின்றோம்.

—இரும்புத்திரைநாடுகளில் ஒன்றாயிருந்து தற்போதுஅத்திரையினின்றும் திமிறிக்கொண்டு வெளிகொண்டுள்ள யூகோசிலேவியாவில் அப்போது கொண்டுபோய்விடப்பட்ட கிரேக்க பிள்ளைகளில் 211 பேர் சென்றவாரம் கிறீசுக்குத் திரும்பியிருக்கிறார்கள். ஆயினும் 8,000 கிரேக்கபிள்ளைகளுக்கு மேல் இன்னும்அந்நாட்டில் இருக்கிறார்களாம்.

—கிறீஸ்நாட்டிலே உள்நாட்டுயுத்தம் நடைபெற்றகாலத்தில் கம்யூனிஸ்தர்களால் தங்கள்வீடுகளிலிருந்து பலவந்தமாகக்கொண்டு செல்லப்பட்ட குடும்பங்களைச்சேர்ந்த 16,000கிரேக்க பிள்ளைகள் இரும்புத்திரைநாடுகளைச் சேர்ந்த எங்கேயோ ஓர்இடத்தில் கம்யூனிஸ்தர்களாக வளர்க்கப்பட்டுவருவதாய்க் கிறீஸ்அரசாங்கம் கண்டறிந்து கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்கண்ட திருவிழா

வதிரி

அமலோற்பவிசபைக் குருமார் வந்த ஆரம்பகாலத்தில் இப்பகுதியிலுள்ள அர்ச். அந்தோனியார் ஆலயம் வடலிசத்தை என்னுமிடத்தில் கட்டப்பட்டது. 1851-ம் ஆண்டு இவ்விடம் பேதிநோய்பரவியபோது அர்ச். அந்தோனியார் சுரூபத்தை ஊர்வலமாகக் கொண்டுசெல்லவே அந்நோய் நின்றுவிட்டதாகப் பாரம்பரியமாகச்சொல்வார்கள். இதுகாரணத்தால்தான் இவ்வாலயத்தில் எழுந்தருளியிருக்கும் கோடிஅற்புதரான அர்ச். அந்தோனியாரைப் பிறசமயத்தவர்கள் "வடலிசத்தையானே" என்றும் "வடலிசத்தை முனிவனே" என்றும் அழைத்துத் தமக்குநேரிடும் ஆபத்துகளில் அவரைநாடிவந்து, அவர் சலிகையை இரந்து, பாதகாணிக்கையும் வைத்துப் போவர். இவ்வாலயத்திற்குச் சிறப்பருளும் மற்றோர்விசேஷம்யாதெனில், வருடந்தோறும் ஆனி 13-ந் திகதி நடைபெறும் தானங்களிற் சிறந்த அன்னதானமே. இத்தானம் விசேடமாக வடமாட்சியில் வேறுஎந்த ஆலயத்திலும் நடைபெறாத மிகப்பெரியதாகும். இவ்வாலயத்திலே அர்ச். அந்தோனியார் திருநாளைமுன்னிட்டு ஆனிமாதத்தில் பத்து நாட்களாகத் திருவிழாநடைபெறும். இம்முறை நான்கண்டதிருவிழா முன்னொருபோதும் கண்டிராதவிதமாக எனக்குக் காட்சிஅளித்தது. இதில் கலந்துகொண்டவர்கள் தங்கள்சக்திக்கேற்றவாறு இதனை நடத்தினார்கள். விசேஷமாக நெல்லியடியார் பாண்ட்வாத்தியங்கள்முழங்க அதனைச் சிறப்பித்தார்கள். பொதுப்படச்சொல்லுகில் எல்லாரும் தங்களால்செய்யக்கூடியதிலும் கூடியபாகத்தை இவ்விழாவிற்காகச் செய்தார்கள். நாடோறும் வேஸ்பர் பாடப்பட்டது. கடைசித் திருவிழாவிற்குரியவர் புத்தகவியாபாரியார் திரு. B. லுக்கேஸ்பிள்ளையும், அவரது இரத்த உரித்தாளருமாவர். அடுத்தாரை வெகுசிறப்பாகச் சோடித்திருந்தனர். ஆலயத்தின் உள்விதானமாகிய மேற்புறமும், சுற்றியுள்ளவெளிப்புறமும் நட்சேத்திரக் கூட்டங்கள் போன்று மின்சார விளக்குகளினால் சோபைபெற்றிருந்தன. ஆலயமுன்றிலில் அமைக்கப்பட்டசிகரம் எல்லோர் கண்களையும்கவர்ந்தது. ஒன்பதாம்விழாவின்போது வண. அன்ரன் இராசகாரியர் சுவாமியவர்கள் பாகோதேனே எனும்படியாய்ப் பக்திச்சுவைநிரம்பிய ஓர்பிரசங்கஞ் செய்தனர். திருநாளாகிய 13-ந் திகதி காலை 7 மணிக்கு வண. B. தியோகுப்பிள்ளை சுவாமியவர்களால் பாடற்பூசை நிறைவேறியது. பூசைமுடிவில் சற்பிரசாத ஆசீர்வாதம் அருளப்பட்டது. அன்று பிற்பகல் 5-30 மணியளவில் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுத் திருநாள் நிறைவாயிற்று.

N. A.

—வத்திக்கான் இராச்சியத்தைச் சூழவர இருந்துவரும்மதில் நான்கு மைல் நீளமுடையதாகும். அதிலே கடந்த இருநூற்றாண்டுகளாகப் படர்ந்திருக்கும் களைகளைச்சுரண்டி அதனைச் சுத்தஞ்செய்வதில் தற்போது பணியாளர் ஈடுபட்டிருக்கின்றனர். நான்குமைல் நீளமான மதிலையும் சுத்தஞ்செய்ப நான்கு பணியாளருக்கு மூன்றுமாசங்களுக்குமேல் செல்லுமாம்.

—பத்துலட்சம் குடிசனங்களைக் கொண்ட தீபேத்துநாடுமுழுவதிலும் ஒரேயொரு கத்தோலிக்கர்மாத்திரமே இருந்துவருவதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. இவரும் புத்தசமயியாய் இருந்து மனந்திரும்பியவர். அயல் நாடொன்றில் இருந்துவந்த சுவிற்சர்லாந்தகுருவானவர் ஒருவரால் இவர் மனந்திருப்பப்பெற்றவர். ஆனால், பாதுகாப்புநிமித்தமாக இவரின் நாமம் அந்தரங்கமாக இருந்துவருகின்றது.

## கால நிருணயந்தணந்த ஓர் கட்டுக்கதை

(காலஞ்சென்ற நல்லூர் சுவாமி. ஞானப்பிரகாசர் அவர்களால் எழுதப்பெற்றது)

"அள்ளாமற் குறைபாது இல்லாமற் பிறவாது" என்றது ஒரு நாடோடிப் பழமொழி; நிதார்த்தமான ஒரு பேச்சு. எந்தத் தலைகரணமான புளுகுக்கும் அடித்தளத்தில் ஒருநல்ல அத்திவாரம் உண்டு. ஒருவன் முழுதும் பொன்னான மலையொன்றைக் கண்டேன் என்று கதைகட்டுவானாயின், அக்கதையிலும் ஒருஉண்மை உண்டு. அன்னவன் ஒருசிறு பொற்கட்டியைக் கண்டிருப்பான்; மலையையும் காட்சியாலோ, கேள்வியாலோ அறிந்திருப்பான். ஆதலால், பொற்கட்டியையும், மலையையும்பற்றிய பாகம்மெய்; ஆயின், அவன், இடவரம்பைக் கெடுத்து, பெரியமலைக்குப்பதிலாய்ச் சிறியபொற்கட்டியை வைத்ததிலேயே பொய் எழுந்து புளுகுக் கதையாய்ப் போய் விட்டது. இதுபோல, சரித்திர உணர்ச்சி இல்லாதவர்கள், காலவரம்பைக் கெடுத்துப் பூர்வஅபர நிருணயம் இல்லாமல் கட்டிவைத்த கதைகளும் உண்டு. அவற்றுள் ஒன்று யாழ்ப்பாடி யாழிற்பாடி யாழ்ப்பாணத்தைக் கைக்கொண்ட கதையாம்.

செங்கடக நகரி (கண்டி) யில் அரசு வீற்றிருந்த செயதுங்க வரராசசிங்கன் எனும் மன்னனைச் சோழதேசத்திலிருந்துவந்த வீரராகவன் எனும் அந்தக் கவிஞன் யாழ்வாசித்துப்பாட, அவன் மனம்பூரித்து மணற்றிடல்எனும் வடஇலங்கையை இவனுக்குப் பரிசிலாக வழங்கினான் என்றதும்; மணற்றிடலை இந்தக் கவிஞனே இந்தியாவிலிருந்து சனங்கொண்டுவந்து குடியேற்றினான் என்றதும்; யாழிற்பாடிய பாணன் அல்லது கவிஞன் பேரால் வடஇலங்கைக்கு யாழ்ப்பாணம்என நாமகரணஞ் செய்யப்பட்டது என்றதும் "யாழ்ப்பாண வைபவமாலை" யின் கூற்று. இதில் பலஅமிசங்கள் உண்மையானவைகளே. செங்கடக நகர் இருந்ததும்மெய்; அந்தக் கவிவீரராகவர்ஒருவர் ஈழதேசத்துக்குவந்து ஒரு அரசனைப் பாடிப்பரிசில் பெற்றதும் மெய்; வடஇலங்கையில் தென்இந்தியர்கள்வந்து குடியேறியதும் மெய்; அது ஒருநாள் யாழ்ப்பாணம் எனும் நவநாமம் அடைந்ததும்மெய். ஆயின், இவைஎல்லாம் வெவ்வேறு காலத்துச் சம்பவங்கள். ஒவ்வொரு சம்பவத்தையும் அதுவருதற்குஉரிய அவதாரத்தில் வையாமல், எல்லாஅமிசங்களையும் ஒன்றுகூட்டி ஒரு காலத்தில் வைத்தமையினாலேதான் நம்முடைய தீபகற்பத்தின் உற்பத்தியைப்பற்றிய விநோத கதையொன்று பிறந்து இலங்கைச் சரித்திர புத்தகங்களிலும் ஏறிக்கொண்டது. காலவரம்பிகந்த இக்கட்டுரைக்கதையே இன்றைக்குப் பள்ளிக்கூடங்களிலும் பயிற்றப்பட்டுவரக் காண்கின்றோம். ஆயின், யாழ்ப்பாணப்பெயர் உற்பத்திக்கதையின் ஒவ்வொரு அமிசமும் எவ்வெக் காலத்துக்கு உரியதுஎன்றதை ஆராய்ந்து பார்க்குமிடத்து, அது ஆதாரம்அற்ற ஒரு கட்டுக்கதையே என்றது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

### செங்கடக நகரி

கண்டிநகர் ஈழதேசத்துக்கு ஒரு இராசதானியாய் வந்ததிகதி யாழ்ப்பாணக் குடியேற்றக் காலத்துக்குப் பொருந்தாது. எமேர்சன் தெனென்று என்பவரது "இலங்கைச் சரித்திர"த்தின்படி, ஈழநாட்டுச் சிங்கள அரசர்கள் வடஇலங்கையிலிருந்துகொண்டு தங்களைத் துன்புறுத்திய தமிழருக்குப் பயந்து அனுராதபுரத்தைவிட்டுப் புலத்திநகரை (பொலநறுவையை) கி. பி. எட்டாம் ஒன்பதாம் நூற்றாண்டுகளிலும், தம்பதெனியாவைப் பதின்மூன்றும் நூற்றாண்டிலும், யப்பாகூவைப் பதினாலாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும், குருநாகலையும், கம்பளையையும் அந்நூற்றாண்டிலேயே சிறிதுகாலத்தின்பின்னும், கண்டியை 1347-ம்ஆண்டு வரையிலேயும் ஒன்றன்பின் ஒன்றாய்த் தங்களுக்குத் தலைநகரி ஆக்கினார்கள். கண்டியாகிய செங்கடக நகரில் ஒருசெயதுங்க வரராசசிங்கன் இருந்து அரசாண்டமை சரித்திரங்களிற் கேட்கப்படவில்லை. வேறொரு நாமமுள்ள கண்டிஅரசனிடந்தான் வீரராகவன் மணற்றிடலைப் பெற்றான் என்று வைத்துக்கொள்ளினும் பொருந்தாது. ஏனெனில், கண்டி ஒரு இராசதானியாயிருந்த பதினாலாம் நூற்றாண்டில்மட்டும்அல்ல, மகாவமிச சரித்திரத்தின்படி, கி. மு. மூன்றும் நூற்றாண்டிலுமே வடஇலங்கை மணற்றிடல் என்ற பெயருக்கு இலக்கியமாகாதபடி நன்றாகக் குடியேறிய ஒரு நாடாக விளங்கியது. மணற்றிடற் குடியேற்றக் கதையைச் சொல்லுகின்ற "யாழ்ப்பாண வைபவமாலை" யும் விசயராசன் காலத்தில் (கி. மு. ஆறும் நூற்றாண்டு) யாழ்ப்பாணத்திற் தமிழர் மிகஇருந்தனர் என்றும், அவ்அரசன் அன்னோருக்காக மூன்று ஆலயங்களை எடுப்பித்தான் என்றும் கூறுமே. ஆதலால் யாழ்ப்பாடி செங்கடகநகர் அரசனிடம் மணற்றிடலைப் பரிசில்பெற்றுக் குடியேற்றினான் என்றகதை மலடிமகன் முயற்கொம்பிலேறி ஆகாசத்தாமரை பறித்தகதைபோல அசம்பாவிதம் ஆகின்றது.

### யாழிற் பாடிப்பெற்ற பரிசில்

இனி, உண்மையில் அந்தகரான ஒரு வீரராகவர் வடஇலங்கையை ஆண்ட ஒருமன்னனிடம்வந்து கவிபாடிப் பரிசில்பெற்ற சரித்திரமும் உண்டு. பெற்றபரிசிலும் வெறும்மணற்றிடல் அல்ல, ஒரு பொற்பந்தமே. கண்ணறையான இக்கவிராயர் செங்கற்பட்டு ஜில்லாவில் உள்ள பூதூரில் வசித்த வடுகநாத முதலியாரின் மகன். படிக்காசுப் புலவரின் ஆசிரியரான வைத்தியநாத நாவலரும் ஒரு துறைக்கோவை எனும்நூல் இசைத்த அமிர்த கவிராயரும் இவர் காலத்தவர்கள் ஆதலால், இவரும் பதினேழாம் நூற்றாண்டில் இருந்தவரே. பிறவிக் குருடராயிருந்தும் பெரும்புலவராய் விளங்கி "ஏடாயிரங் கோடி எழுதாது தன் மனத்தெழுதிப்படித்த" இவர், தமிழைக்காக்கும் அரசசபைகள் தோறும் சென்று பரிசில் பெற்றுவருபவர், வடஇலங்கைக்கும் விசயஞ்செய்தது எதிர்மன்ன சிங்ககுமாரன் எனும் ஐந்தாம் பரராசசேகரனின் நாட்களிலாம் எனத் தோன்றுகின்றது. அப்பரராசசேகரன் அந்தகரைப் பார்ப்பது துர்ச்சகுனம் என்றெண்ணிப் போலும் (அல்லது கண்டியரசர்கள் பிறதேசத்தவருக்குப் பேட்டிகொடுக்கும் முறையை அடியொற்றி) திரைமறைவிலிருந்து இவர் பாடலைக் கேட்டபோது:

"நரைகோட் டிளங்கன்று நல்வள
நாடு நயந்தளிப்பான்
விரையோட்டு தார்ப்புய வெற்பீழ
மன்னனென் றேவிரும்பிக்
கரையோட்ட மீதின் மரக்கலம்
போட்டுனைக் காணவந்தால்
திரைபோட்டு நீயிருந் தாய்சிங்க பூப
சிரோமணியே"

"வாழு மிலங்கைக்கோ மானில்லை
மானில்லை
ஏழு மராமரமோ விங்கில்லை —ஆழி
அலையடைத்த செங்கை யயிராமா
வின்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு"

என்று பாடினார் எனவும், அரசன் இவரது கவிநயத்தை வியந்து ஒரு பொற்பந்தம் அளிக்க, இவர்:

பொங்குமிடி யின்பந்தம் போயதே
என்கவிதை
எங்கும் விருதுபந்த மேற்றதே
—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுயன் வீரபர ராச
சிங்கம்
பொற்பந்த மின்றளித்த போது

என்று விடையளித்தார் எனவும் ஐதிகம்கூறும். எப்படியாயினும் பிந்திவந்த இந்தஉண்மையான யாழ்ப்பாடி தாமும் எமது குடாநாட்டைப் பரிசிலாக அடைந்தவர்அல்ல. ஆயினும், இடைக்காலத்தில், இதற்கு வந்திருந்த யாழ்ப்பாணம் எனும் இடப்பெயரை யாழ்பாடும் யாழ்ப்பாணனோடு பொருத்திச் சப்தஉற்பத்தி கூறமுயன்றயாரோ ஒரு பிற்காலக் கவிவாணர், அந்தக்கவி வீரராகவர்பெற்ற கொடையை வேறொன்றாக மாற்றிக் கற்பித்துவிட்டார். அக்கதையின்படி அரசன் வீரராகவருக்கு ஒரு யானைக் கன்றைக் கொடுத்தருள, இவர்:

இல்லெனுஞ்சொல் லறியாத சீமை
யில்வா ழுதானனிடம்
போய்யாழ்ப் பாணன்
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்
சோறும் பழந்தூசும்
பாலியாமற்
கொல்லநினைந் தேதனது நால்
வாயைப் பரிசென்று
கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென தொருவாய்க்கும்
நால்வாய்க்கும் மிரையெங்கே
தருவவேனே

என்று கவலுதலும், அரசன் அவ்யானைக்கன்று வளரும்படியான நாடுங் கொடுத்தனன் என்று அக்கவிவாணர் எடுத்திசைத்தான்.

(தொடரும்)

## தமிழ்ப்பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி

இப்போட்டியானது நீர்கொழும்புத் தமிழ்ப்பாடசாலைகளின் ஆசிரிய சங்கத்தாலே 2-6-51 சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நகரசபை முற்றவெளியிலே, நகராதிபர் திரு. A. N. D. அபயசிங்க M. B. E., நீர்கொழும்புத் தமிழ்ப்பாடசாலைகளின் வட்டாரவித்தியாதரிசி திரு. M. இராஜ சுந்தரம் B.S.C., Dip-in-Edu. என்போர் தலைமையில் விமரிசையாக நடந்தேறியது. அவ்வமயம் ஆசிரியர்கட்கும், மாணவர் மாணவிகட்குமிடையே ஏற்பட்டிருந்த பலத்தஅபிமானம் ஈண்டுகுறிப்பிடத்தக்கது. போட்டியிலே தடையோட்டம், பாண்சாப்பிடல், தவளை ஓட்டம், நீர்ப்போத்தல் ஓட்டம் போன்றவை பெரிதும்கவர்ச்சிக்குரியனவாகும். பிற்பகல் 6 மணியளவில் போட்டி முடிவெய்தியதும் நகராதிபர் அவர்களால் வெற்றிபெற்ற மாணவர் மாணவிகட்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இவற்றுள் கொச்சிக்கடையைச் சேர்ந்த தூவணைக் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையே வெற்றிகளினாலும், பரிசில்களினாலும் முதல் இடம்வகித்தமை பாராட்டத்தக்கது. ஈற்றில் வித்தியாதரிசி அவர்களாலும் சங்கத்தலைவர் அவர்களாலும் நகராதிபருக்கு நன்றிகூறப்பட்டு விளையாட்டுப் போட்டி விமரிசையாகமுடிபெய்தியது.

— நிருபர்

—ஆசா. மரியேதெரேஸ் குடேர்க் அம்மாளுக்கு முத்திப்பேறுபட்டம் சூட்டும் திருச்சடங்குக்குச் சமுகந்தரப் பிரான்சிய யாத்திரிகர்கள் றோமாபுரிக்கு வருவதைக்காட்டிலும் அவர்கள் தங்கள் இல்லங்களிலேயே தங்கியிருந்து அன்றுதினம் தேர்தலின் போது சம்மதவாக்குகள் அளிப்பதையே வத்திக்கான் மேலாக மதிக்கலாயிற்று.

—"யூனைற்றெட் ஸ்ரேற்ஸ்" எனும் நாமத்துடன் கட்டப்பட்டுவரும் அமெரிக்கபிரயாணக்கப்பல் இம்மாதத்திலே கடலில் இறக்கப்படவிருக்கிறது. அமெரிக்கஐக்கியதேசத்தில் இதுகாலவரை கட்டப்பட்டுள்ள மகாதீவிர பிரயாணக் கப்பல் இதுவாம். இது பிரயாணஞ் செய்யத் தொடங்குமிடத்துப் பிரித்தானியின் மிகத்தீவிர பிரயாணக்கப்பலான "குயின்மேரி"யையும் தீவிர போக்கில் தோற்கடித்துவிடுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mal. No. 491. Eng.

## உலகத்தின்கூரை

உலகின் ஓர் பெரும்பகுதியிலே மக்கள்இடையருது துரிதமானபோக்கில் வாழ்ந்து ஒவ்வோர் கருமத்தையும் இயன்றகெதியிலே செய்துமுடிக்கத் தங்கள்பலத்தைச்செலுத்தி முயன்றுகொண்டிருக்கும்போது, காலத்தைப் பற்றி மனிதன்சங்கடப்படாது சாந்தமாகவும், சமாதானமாகவும் நாளிலும் பொழுதிலும் வாழ்ந்துகொண்டிருக்கிற பகுதிகள் இவ்வுலகில் இன்னுமே இருந்துவருகின்றன.

அவ்வாறிருக்கும்பகுதிஒன்று ஆபுகானிஸ்தானிலே உதாரணமாயிருக்கிறது. அங்கே மலைநாட்டுப் பமீர்சம வெளிகளிலே, "உலகத்தின் கூரை" யிலே ஒருகோடிமக்கள் சஞ்சரிக்கின்ருர்கள். வருடத்தின் அதிபெரும பகுதியிலே மிகப்பரந்த இந்நாட்டிலுள்ள இடையர்கள் பலவர்ணமுள்ள கூடாரங்களை அமைத்து, மிகஉயரமும் அணுகுவதற்கு மிகக் கஷ்டமுமான மலைகளிலுள்ள மேய்ச்சல்நிலங்களிலே வெள்ளாடுகளும், செம்மறியாடுகளுமான தங்கள் மந்தைகளைப் பாலனம் பண்ணுகிருர்கள். தங்கள்உற்பத்திப் பொருட்களை அவர்கள்விற்பனைசெய்ய விரும்பும்போதுதான் பள்ளத்தாக்குக்கு இறங்குகிருர்கள்.

மற்றவர்கள்பயன்படாதகாணிகளைத் திரும்பவும் செய்கைபண்ணுகிருர்கள். அல்லது மிகுந்தபொறுமையுடன் தங்கள்கம்பளங்களை நெய்கின்ருர்கள். ஒரு சிறுதொகையினர்மாத்திரம் ஒருசில வாயுள்ள பட்டினங்களிலே வசிக்கின்றனர். அங்கேஇவர்கள் களிமண் கொண்டு சாமானியவீடுகளைக் கட்டியிருக்கிருர்கள். மேலைத்தேசநாகரீகம் முற்றுமேதீண்டாது இந்தச்சனங்களைக் கைவிடுகின்றது. அங்கே புகையிரதங்கள்இல்லை. பிறநாட்டினரான சிலரும், உயர்தர அதிகாரிகள்சிலருமே இக்கால மோட்டர்கார்களில் அங்கு பிரயாணஞ்செய்கிருர்கள். அங்குசனங்களின் சாதாரண போக்குவரத்து இன்னும் ஒட்டகக்கூட்டத்திலேயே நடைபெறுகின்றது. இந்தவிதமாகவே ஆபுகானிஸ்தானில் மானிடவாழ்க்கை நாளுக்குநாள் அமைதியாக நடந்து வருகின்றது. ஆனுல், நாகரீகத்துக்கு வெளியே மக்கள்சஞ்சரிக்கின்ற மறு பகுதிகளும் இருக்கின்றன.

இதுசம்பந்தமாய்ப் பூர்வீகசாதிகள் ஆதிகாலத்துத் தூரமான நடுக்காடுகளிலே சஞ்சரிக்கின்ற அயனுந்த நாடுகளைப்பற்றியேசிந்திக்கின்ருேம்.உஷ்ண சுவாத்தியங்களிலே இந்தச்சனங்களின்வாழ்க்கை பலமுறையும் அப்பகுதிகளில் பரந்துவருவனவும், சுகாதாரக்குறைவால் உண்டுபடுவனவுமான அயனுந்தநோய்களால் கெட்டுப்போகிறது.

அதிகமாகப்பரக்கின்ற இந்தநோய்களில்ஒன்று மலேரியாவாகும். இது வருடந்தோறும் லட்சக்கணக்கானமக்களைப் பலியெடுத்துவருகின்றது. தற்போதுஇல்லாதொழிந்த சர்வதேசசங்கத்தாலே நியமிக்கப்பட்ட மலேரியா நிபுணர்களின் கம்மிற்றியானது இரண்டாவது உலகயுத்தத்துக்கு முந்தியவருடங்களிலே இந்தநோயை எதிர்த்துப் போராட அதிகமானகாரியம் செய்திருக்கின்றது. 1938-ம்ஆண்டு அது வெளியிட்டஅறிக்கையே மிகமுக்கியமானது. அதிலேஅவர்கள் மலேரியா வராமல்தடுக்கும் ஓர்நடவடிக்கையாக மலேரியாக்காலமுழுவதும் தினமும் 6 கிறேய்ன்குயினைன் அருந்தவேண்டுமெனச் சிபாரிசுசெய்திருக்கின்ருர்கள். மேலும், ஓர்கால்மலேரியா காணுமிடத்து ஓர்சித்திகரமான மாற்றுமருந்தாக 5முதல் 7 நாட்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறேய்ன் குயினைன் அருந்தவேண்டுமென்று ஆலோசனை கூறியிருக்கின்ருர்கள்.

## அகத்தியின் அருங் குணங்கள்

நம்மிலே அகத்தியைப்பற்றி அறியாதார் இல்லையெனலாம். அகத்தி இலையும், பூவும், பிஞ்சும் மிகஅருமையான ஆகாரங்களாகும். அகத்தியிலே இருவகை உண்டு. அவை: செவ்வகத்தி, வெள்ளையகத்தி என்பன. செவ்வகத்தியை ஆகாரத்திற்குப் பாவிப்பதில்லை. அகத்தி எளிதாகப் பயிர்செய்யப்படக் கூடியது. தென்னிந்தியாவிலே வெற்றிலைக்கொடிகளுக்குக் கொடிக்கால்களாக அகத்திமரங்களையே அதிகமாய் உண்டுபண்ணுகிருர்கள். இது சிறு செடியாகவும் வளர்வதில்லை. பெரும்மரமாகவும் வளர்வதில்லை. நடுத்தரமரமாய் வளரும். இலங்கையிலே வெற்றிலைக் கொடிகளுக்கு அகத்திமரம வைப்பதில்லை. ஆனுல், அகத்திமரத்தில் படர்ந்த கொடிகளின்வெற்றிலை மிருதுவாயும், சுகந்தருவதாயும் இருக்கும்.

அகத்தி சிக்கிரத்தில் பூக்கக்கூடியது. ஆகையால் இதற்குச் சீக்கிரபுஷ்பி என்ற பெயரும்உண்டு. பூ மிகஅழகாயிருக்கும். பூந்தோட்டங்களிலே பயிரிட்டால் அழகுக்குஅழகாகவும், ஆகாரத்திற்கு ஆகாரமாகவும் உபயோகப்படுத்தலாம். அகத்திமரம் தெய்வங்களுக்கும், முனீஸ்வரர்களுக்கும் பிரியமானதென்று சிங்களவர் கூறுவார்கள். அதனுல் அதை "முனிப்ரிய" "சுரப்ரிய" என அவர்கள் அழைக்கிருர்கள். தெய்வத்துக்குப் பிரியமானமரத்தை வீட்டினருகில் உண்டாக்குவது நன்மையெனக் கொள்ளுகிருர்கள்.

அகத்திக்கீரையைச் சமைத்துச் சாப்பிட்டுவந்தால் உடலுக்கு மிக ஆரோக்கியம் ஏற்படுவதுடன் பற்பல நோய்களும் நீங்கும். வாய்ப்புண், குடற்புண், பித்தம், பிரமேகம், மலபந்தம், தேகச்சூடு, கபக்கட்டு முதலியன குணமாகும். ஆயினும் அகத்திக்கீரையைப் பகற்சாப்பாட்டுடன் சாப்பிடுவதே நன்மையானது. இரவில் சாப்பிடக்கூடாதென்பது வைத்திய நியதியாகும். அதிலும் கீரைதான் கண்டிப்பாய் இரவில் சேரக்கூடாது. அமாவாசை, பௌர்ணமை நாட்களிலும் இதைச் சாப்பிடக்கூடாதென்பார்கள். மருந்து சாப்பிட்டுவரும் காலத்திலும் அகத்திக்கீரை சாப்பிடப்படாது. இது மருந்தை முறிக்கும் குணமுடையது.

அகத்திப்பூ: இது மிகவும் ருசிகரமான ஓர்ஆகாரம். இதனைச் சாப்பிட்டால் தேகக்குளிர்ச்சி உண்டாகும். காய்ச்சலை அகற்றும். நீர்க்கடுப்பு, எரிச்சல் முதலிய பிரமேகநோய்களையும் குணமாக்கும். பீனிசம், கபம், பித்தம், வாதம் முதலியவற்றையும் நீக்கும்.

அகத்திக்காய்: இளம்பிஞ்சுகளைச் சாப்பிட்டால் ருசியாயிருப்பதோடு ஞாபகசக்தியும் அளிக்கும். பூவுக்குள்ள குணங்களும் பிஞ்சுசாப்பிடின் கிடைக்கும். முத்தோஷம், பாண்டு முதலியன நீங்கும். ஆனுல், முற்றின காய்களைச் சாப்பிட்டாலோ பித்தமுண்டாகும். "அகத்தி ஆயிரம்காய் காய்த்தாலும் புறத்தி புறத்திதான்" என்று ஓர்பழமொழி உண்டு. இது காயைச் சாப்பிடக்கூடாதென்றபொருளில் ஏற்பட்டதல்ல. ஆனுல், முற்றின அகத்திக்காய்க்குக் கெட்டகுணங்கள் இருப்பதாலும், அதை முற்றினபிறகு சாப்பிட்டால் ருசியாய்இராததாலும் அதனைப் புறத்தியாக ஒதுக்கிவிட்டார்கள்.

பித்தம் நீங்க: அகத்திக்கீரை இரண்டுபிடி, எலுமிச்சைஇலை ஒருபிடி, இரண்டையும்இடித்து இரண்டரைப்பலம் கொத்தமல்லியை அதனுடன்கலந்து, மூன்றுபடி தண்ணீர் வைத்துக் காய்ச்சி அரைப்படியாக வற்றவைத்து அக்கஷாயத்தை ஆறு பாகமாக்கி [illegible] இருவேளை வீதம் அருந்த[illegible]

அகத்திக்கீரையை வாரத்திற்கு இருமுறை ஆகாரத்துடன் சாப்பிட்டுவந்தாலும் பித்தம், பித்தாதிக்கம், பித்தமயக்கம் இவை அணுகா.

வாய்ப் புண்ணுக்கு: அகத்திக் கொழுந்திலே சூரிய உதயத்திற்குமுன் ஒருபிடிஎடுத்து மென்று தின்றுவந்தால் வாய்ரணம், புண் நீங்கும். சூடு தணியும்.

சூடுதணிய: அகத்திஇலை ஒருபலம் எடுத்து இரண்டுபலம் பசுவின்நெய்யில் போட்டுக் கால்விராகனிடை குங்குமப்பூபோட்டுக் காய்ச்சிஇறக்கிக் காலைமாலை இருவேளை உட்கொண்டுவர, அனலினுலும், புகையினுலும் ஏற்படும் வெப்பம் தணிவதுடன் பித்தமும் தணியும்.

சூட்டுக்குத் தைலம்: அகத்திக் கீரைச்சாறும், நல்லெண்ணெயும் சமனுகக்கூட்டி அடுப்பிலேற்றி வெந்தயத்தைப் பாலில் அரைத்துப்போட்டுத் தைலபதமாகக் காய்ச்சிஇறக்கித் தலைமுழுகிவந்தால் சகலசூடும் தணியும். தேகம் குளிர்ச்சிபெறும். அகத்தி வேர் ஒருபங்கு, மிளகு காற்பங்கு, அதிமதுரம் காற்பங்கு, இவற்றைஇடித்துக் கியாழமிட்டுத் தினம் ஒருவேளை சாப்பிட்டுவந்தால் கண், காது, மூக்கு முதலியவற்றின் எரிவும், கைகாலெரிவும் நீங்கும்.


BEST
CROWN BRAND
TILES
*IMPORTER & STOCKIST :—*
MRS. EMMANUEL TIRUCHELVAM
"TIRUCHELVAM BUILDINGS"
MAIN STREET, JAFFNA.
INDIAN BRICKS & FLOORING TILES
ALSO AVAILABLE.
T'gram: Tirchelvam. T'phone: 52.


### அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



#### நன்றியறிந்தஸ்தோத்திரம்

யாழ்ப்பாணம் :— கோடிஅற்புதராகிய அர்ச். அந்தோனியாரிடம் நான் கேட்ட மன்ருட்டு அனுகூலமானதினுல் அவரின் ஏழைகள் தருமஅப்பத்துக்கு ரூபா 2 அனுப்புகிறேன். என்றும் அவரின் மன்ருட்டைக்காத்திருக்கும் அடியாள்,

எஸ். பிளசம்.

#### கேட்டநன்மைகள் அனுகூலமானதினுல் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

கல்கமுவா: எம். எஸ். அந்தோனிப்பிள்ளை -50— பசறை: பிலிப் அந்தோனி 1-00 — தலவாக்கொலை: ஏ. பி. சிங்கராயர் 10-00— பண்டாரவளை: எஸ். வி. பீற்றர் 3-00— டிக்கோயா: எம். வில்லியம் 2-00— கல்கமுவா: எம். சந்தியாப்பிள்ளை 1-00 — மஸ்கேலியா: பி. கபிரியேல் 1-50 — மாம்புரி: ஏ. மரியாம்பிள்ளை 1-00 — கேகாலை: ஏ. சுவக்கீன் 10-00— மூதூர்: ஏ. கே. ருேசாடிஷா ஊ. 1-00— வவுனியா: பி. ஜே. சிறில் 3-00 — கொழும்பு: எஸ். எம். யோசேப்பு 2-00—கண்டி: பி. பி. சீமோன் 1-00— அப்புத்தளை: என். டி. சிமியோன் பிரான்சீஸ் 2-00 — கொழும்பு: ஓர் உபகாரி 3-00— சூராவத்தை: பாக்கியரத்தினம் 1-00, அர்ச். அந்தோனியார்பக்தன் 2-00 — நெடுந்தீவு: வி. ஜே. சின்னையா 5-00 — கொழும்பு: கே. அல்வீனு பெரேரு 1-00 — அக்கரபத்தன: எல். ஏ. எஸ். தோமஸ் 4-00— மாம்புரி: ஏ. எபிரேம்பிள்ளை 2-00 — முள்ளிக்குளம்: எஸ். ஞானம்மாள் 1-00— மண்டைதீவு: எஸ். ஆர். ஞானுதிக்கம் 1-00 — அப்புத்தளை: ஏ. டி. சீமோன் பிரான்சீஸ் 2-00 — மஸ்கேலியா: சூசை 3-00— யாழ்ப்பாணம்: எம். யோசேப்பு 1-00—புத்தளம்: பிருங் எல். லீயோ 5-00— காலி: மிசெஸ் ஜி. ஏ. ரி. எம். அந்திரேயாஸ் 6-00 — சூராவத்தை: ஏ. மரிய கொறற்றி -50, எம். இறப்பியேற்பிள்ளை 3-00—நாத்தாண்டி: வி. டி பி. பெறேரு 2-00 — யாழ்ப்பாணம்: மிசெஸ் துரைராசா 2-00— இற்ருலை: மிசெஸ் ஜி. அன்ரன் 1-50 — அப்புத்தளை: பி. ஏ. பிரான்சீஸ் 3-50 — கம்பளை: ஏ. டி. சேவியர் 2-00—குருனுகல்: ஜி. எஸ். சின்னத்துரை 1-00— முல்லைத்தீவு: அன்னம்மாள் 2-00 — இலுப்பைக்குளம்: மாற்கு -50, சிசிலியா 1-00 — திரிகோணமலை: தோமஸ் மோசேஸ் 1-50—பரந்தன்: எம். கிதபொன்கலன் 1-45 — அச்சுவேலி: பி. எஸ். 2-00 — வவுனியா: ஜே. சைமன் 1-00 — உடப்புசலாவை: மிசெஸ் எஸ். வி. பீற்றர் 1-25— ஏத்தாலை: டபிள்யூ. எம். பிருன்டோ 2-00 — வட்டகொட: எஸ். ஜே. டேவிற்பிள்ளை 1-00 — பசறை: பிலிப் அன்ரன் 1-00 — விண்டுலா: எம். ஜே. பெறேரு 5-00 — கட்டைக்காடு: எஸ். சீமாம்பிள்ளை 3-00 — நீர்கொழும்பு: கே. எஸ். மனுவல் அன்ரனி 1-00— பண்டத்தரிப்பு: எஸ். அடைக்கலமுத்து 2-50 —முள்ளிக்குளம்: எஸ். பிரகாசியம்மாள் 1-00 — காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசிஐயா 5-00 — சிலாபத்துறை: ஏ. எஸ். எம். செல்லத்தம்பி 5-00 — சூராவத்தை: ஜே. பிலோமினு 2-00, ரி. பரமேஸ்பரி 2-00—யாழ்ப்பாணம்: பி. எஸ். பஸ்ரியாம்பிள்ளை 5-00— முள்ளிக்குளம்: எல். அருளம்மா 1-00— கன்னுட்டி: எஸ். எம். பெமியான் 1-00—மஸ்கேலியா: எம். வஸ்தியாம்பிள்ளை 7-00— கேகாலை: ஏ. யுவக்கீம் 10-00 — வட்டகொட: எஸ். அலெக்சான்றர் 4-00— சிங்கப்பூர்: எம். ஏ. வின்சென்ற் 5-00—சூராவத்தை: எஸ். ஆசீர்வாதம் 3-00 — கொழும்பு: எஸ். எம். யோசேப்பு 2-00 — பண்டாரவளை: சூசைமரி பீற்றர் 3-00 —கண்டாப்பொல: மிசெஸ் பி. அந்தோனிப்பிள்ளை 2-00 — கல்கமுவா: ஏ. சுவாம்பிள்ளை 1-00 — மஸ்கேலியா: பி. கபிரியேல் 1-00 — பரந்தன்: ரி. மரியான் 2-00 — நுவரேலியா: எவ். எம். யோசேப் 2-00 — மஸ்கேலியா: தாண்டவல் 2-00.

The Director,
St. Joseph's Conference.
Bishop's House.
JAFFNA.

சென் வின்சென்ற் டீ போல்சபைத்தலைவர்
மேற்றிராசன மாளிகை
யாழ்ப்பாணம்.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 69, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, June 21 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org